இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 18 | திகதி : 20.10.2019 | விலை : 30.00

இளையோர் கல்வி வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை கொடுங்கள்

- தலைமை அமைச்சரிடம் யாழ் ஆயர் வேண்டுகோள்

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களைக் கடந்த 17.10.2019 வியாழக்கிழமை, ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் தலைமை அமைச்சர் மீண்டும் ஆட்சிக்கு வரும் பட்சத்தில், சில அவசர தேவைகளை உடன் நிவர்த்தி செய்யுமாறு அவரிடம் கோரியதாக ஆயர் பாதுகாவலனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

ஆயர் மேலும் தெரிவிக்கையில் இன்று வடக்குக் கிழக்கில் முக்கிய தேவையாக இளையோர் கல்வியும், தொழில் வாய்ப் பின்மையும் பிரதான பிரச்சினையாகவுள்ளது. அதுவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூல காரணமாகக்கூட அமை கின்றது. எனவே உயர் கல்வி மையங்களையும், தொழில்நுட்பம் சார் பயிற்சி நெறிகளையும், அதன் வழியாக வேலை வாய்ப்பினையும் உடன் அமைக்க ஆவன செய்யுங்கள் எனவும், பணி வேலைவாய்ப்புக்குத் தேவையான கற்கை நெறிக ளையும், பட்டப்படிப்புகளையும் அறிமுகப்படுத்துங்கள் எனவும் ஆயர் தலைமை அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

மறைபரப்புக்கான சிறப்பு மாதம் ஒக்டோபர் – 2019

நீங்கள் திருமுழுக்குப்பெற்று அனுப்பப்பட்டவர்கள்

சிறப்புக் கட்டுரைகள் உள்ளே

ஒரு மில்லியன் மழலைகளின் திருச்செபமாலை

செபமாலை அன்னையின் மாதமான ஒக்டோபர் 18ம் நாள் உலகளாவிய கத்தோ லிக்கத் திருஅவையில் ஒரு மில்லியன் மழலைகள் இணைந்து உல கத்தின் மனித நேய ஒன்றிப் பிற்காகவும் உலக அமைதிக் காகவும் செபிக்க **"Church in Need"** நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

அன்றைய தினம் நம் பிள்ளைகளை எம் பங்கு களிலும், இல்லங்களிலும் ஒன்றுகூட்டி இக் கருத்துக்காக உலகத் திருஅவையோடு இணைத்து மன்றாடு வோமாக.

சர்வமத ஒன்றிப்பின் மூலமே நாட்டின் சமாதானத்தை அடைய முடியும்

- யாழ். ஆயர்

எகெட் கரித்தாஸ் திருகோணமலை சர்வமதத் தலைவர்கள் அதன் இயக் குனர் அருட்பணி.டன்ஸ்ரன் அடிக ளார் தலைமையில் 15.10.2019 காலை யாழ்.ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களையும், யாழ் கரித்தாஸ் கியூ டெக் சர்வமதத் தலைவர்களையும் ஆயர் இல்லத்தில் சந்தித்து இன்றைய சமய யதார்த்த நிலைகளைக் கலந் துரையாடினர்.

யாழ். ஆயர் சமயத்தலைவர்கள் மத்தியில் கருத்துத்தெரிவிக்கையில் "நாட்டின் சமாதானத் தையும் நல்லிணக்கத்தையும் சர்வமத ஒன்றிப்பின் மூலமே ஏற்படுத்தலாம். இதற்கு சர்வமத நல்லுறவு பலமாக செயற்பட வேண்டியது மிக முக்கியமாகும். எல்லா சமயங்களும் அன்பு, கருணை, இரக்கம் போன்ற பண்புகளையே போதிக்கின்றன. ஒரு சில மதத் தீவிரவாதிகளால் ஏற்படும் மத முரண்பாடுகளைக் களைவதற்கு சகல மதங்களிலும் உள்ள தலைவர்கள் முன்னின்று உழைக்கவேண்டும்.சமய முரண்பாடுகளைத் தோற்றுவிப்பது அரசியல்வாதிகளே. அவர்கள் தமது அரசியல் இலாபத்திற்காக இன, மத குரோத செயற்பாடுகளைத் தோற்றுவிக் கின்றனர். எனவே மதத்தலைவர்களாகிய நாங்கள் விழிப்புடன் இருந்து எம் மக்களை ஒருமைப் பாட்டின் கீழ் வழிநடத்தவேண்டும்" என்றார்.

ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 17.10.2019 வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். ***பாதுகாவலன்*** கேட்போர் கூடத்தில் ஆயர் வ. தியோகுப் பிள்ளை அறக்கொடைப் பேருரை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. ***"நல்லாயனாய் ஆயர் வ. தியோகுப்பிள்ளை சமய, சமூக, அரசியல் பணிகள் ஊடாக வெளிப்படும் தலைமைத்துவம்"*** என்னும் தலைப்பில் ***அருட்பணி யோண் பெப்ரிஸ் அன்ரனி*** அறக் கொடைப் பேருரையை நிகழ்த்தினார். இந்நிகழ்வுக்குக் குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்திரு A.F.பெனற் அடிகள் தலைமை ஏற்றிருந்தார்.

பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், குருக்கள், துறவியர், குருமட மாணவர்கள், புத்தி ஜீவிகள் என நூற்றிற்கும் அதிகமானவர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

லண்டன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல்

லண்டன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் 32வது ஒன்றுகூடல் 12.10.2019 அன்று கிறீன் போர்ட் இல் சிறப்பாக நடைபெற்றது. இவ் வருடாந்த ஒன்றுகூடலின் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

லண்டன் கத்தோலிக்க ஒன்றியமானது கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையிலுள்ள நான்கு தமிழ் கத்தோலிக்க மறைமாவட்டத்திலுள்ள போரினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் பலவற்றை புரிந்து வருகின்றது.புலம்பெயர் லண்டன் வாழ் தமிழ் கத்தோலிக்கர் களின் நிதிப்பங்களிப்புடனேயே இப் பங்களிப்பானது மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ் மறைமாவட்டத்தின் கிளி. ஆரோபணம் சிறுவர் இல்லம், உயர் குருமடம் எமில் ஓய்வு நிலைக்குருக்கள் இல்லம் என்பவற்றிற்கு இந் நிதியத்திலிருந்து உதவி கிடைப்பதை நன்றியோடு நினைவுகூருகின்றோம்.

திருமுழுக்குப்பெற்ற நீங்கள் ஆன்ம வாஞ்சையோடு உலகெங்கும் சென்று திரு அவைக்கு சீடர்களை ஏற்படுத்துங்கள்

மறைபரப்புத் தினத்திருப்பலியில் யாழ். ஆயர்

உலகத்திருஅவையோடு இணைந்து மறைபரப்புத் தினத்தை நினைவுகூர்ந்து திருப்பலியை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் கடந்த 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒப்புக்கொடுத்த யாழ்.ஆயர் அவர்கள் தமது மறையு ரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் அன்று ஐரோப்பாவிலிருந்து இறை விசுவாசம் ஆசியத் தேசத்திற்கு ஆன்ம வாஞ்சையோடு பரப்பப்பட்டது ஆனால் இன்று ஐரோப்பாவில் இறை விசுவாசம் அற்றுப்போகின்ற அபாய சூழ்நிலை தோன்றியுள்ளது ஆகவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டை மறைபரப்பின் சிறப்பின் மாதமாகப்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

எமது எண்ணம்

தலைமையை எம் வாக்கு தீர்மானிக்குமா?

ஜனநாயகத்திற்கான அடிப்படை சாதனங்களில் வாக்குரிமை என்பது முதன்மை பெறுகின்றது. இவ்வாக்குரிமை மக்களின் அடிப்படை உரிமையாகும். அத்தகைய அடிப்படை உரிமையான வாக்குரிமையை மக்கள் புரிந்துணர்வுடன் பயன்படுத்தும் போது அதுவே ஜனநாயகத்தின் வெற்றியாக அமைந்துவிடுகிறது.

இலங்கையில் 1910 களில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியில் பெண்களுக்கான வாக்குரிமை மறுக்கப்பட்டிருந்தது. இந்நிலை 1931 ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் டொனமூர் யாப்பில் மாற்றியமைக்கப்பட்டு, சர்வஜன வாக்குரிமை இலங்கை வாழ் மக்களுக்கு வழங்கப்பட்டது.

சர்வஜன வாக்குரிமையினால் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் இலங்கை பெரு வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது. அரசியல் நிலையில் மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சி அடையவும், தேர்தல் தொகுதி விரிவடையவும், மக்கள் தாம் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும், எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெறவும் சர்வஜன வாக்குரிமை வழிகோலியது.

சமூக விளைவுகளாக இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு, தாய்மொழி போதனா மொழியாக்கப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டமையும், தொழிலாளர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டமையும், இலவச சுகாதார சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகளை நோக்குகையில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள், தொழில்சார் நலச் சட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், பிரதேச மட்டங்களில் தொழிற்சாலைகளை அமைத்தல், கிராம அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்பட்டது.

இத்தகைய பெருமாற்றத்தை ஏற்படுத்திய வாக்குரிமைப் பலத்தை நாம் புறக்கணிப்பதோ அல்லது உதாசீனம் செய்வதோ அல்லது ஏனோதானோ என்ற அடிப்படையில் பயன்படுத்துவதோ ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடாகவே மாறிவிடும் என்பதை அனைவரும் மனதிற்கொள்ள வேண்டும்.

சர்வதேச விமான நிலையம் இவ்வாரம் பலாலியில் திறக்கப்பட்டு தமிழர் தாயகமான யாழ்ப்பாணத்திற்கும் சர்வதேசத்திற்குமிடையில் இணைப்பு ஏற்படுத்தப்பட்டமை நாம் தோற்கடிக்கப்பட்ட இனம் அல்ல என்பதைத் தெட்டத்தெளிவாக்கியுள்ளது. நாம் தோற்றுப்போனவர்கள் என்பதை எவரும் எந்த மூலையிலாவது எண்ணமுடியாத சூழலை சர்வதேச விமான நிலையத்தின் திறப்பு திறந்துள்ளது.

எமது நியாயபூர்வமான, சட்டரீதியான, எவருமே மறுக்கமுடியாத உரிமைகளை நாம் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட சமிக்கையாக இவ்விடயம் பலராலும் நோக்கப்படுகிறது. இத்தகைய சூழலில் தான் நாட்டின் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு நாம் மீண்டும் ஒருமுறை முகம்கொடுக்கத் தயாராக நிற்கின்றோம்.

எந்தத் தலைமைத்துவம் வந்தாலும் எமக்கு என்ன கிடைக்கப்போகிறது என வாதப்பிரதிவாதங்கள் அரசியல் களத்தில் மற்றும் சமூகச் சூழலில் நடைபெற்று வருகின்றது. எது எவ்வாறாயினும் நாட்டின் தலைமைத்துவத்தைத் தீர்மானிக்கும் சக்தி எமது ஒவ்வொரு வாக்கிற்கும் உண்டென்பதை நாம் நிதர்சனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். திண்ணிய நெஞ்சமும், தெளிந்த நல் அறிவும் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற இத்தேர்தல் களத்தில் எமது பங்கு காத்திரமானதாகப் பாத்திரம் ஏற்கப்பட வேண்டும்.

கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் எமக்குக் கசப்பான செய்திகளைத் தந்திருக்கலாம். அத்தகைய தேர்தலில் தூர நோக்குடன் சிந்தியாமல் எமது வாக்குகளைப் பயன்படுத்தி சிறைக் கதவுகளை திறந்துவிட்ட படிப்பினையை நாம் மறந்துவிடக் கூடாது. இம்முறை ஏறத்தாழ 35 பேர்கள் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். எனினும் இருவருக்கே முதன்மை இடங்கள் இருந்து வருவதை தேர்தல் பிரசார சூறாவளிகளில் அணிதிரளும் மக்கள் அலை தெளிவாக்கியுள்ளது.

நமது நாட்டின் தலைமைத்துவத்தை தீர்மானிக்கும் இறுதி அஸ்திரமாக இதுவரை காலமும் இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்களின் வாக்குகளே இருந்து வந்துள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் இலங்கையின் அரசியல் களத்தில் உள்ள எந்தவொரு சிங்களத் தலைவர்களிடமும் குறைந்தபட்சம் ஒரு சமஷ்டித் தீர்வைக் காணுவதற்கான அரசியல் திடசித்தம் இல்லவே இல்லை. அதற்கான உள்ளடக்கத்தையும், தகுதியையும், மனப்பாங்கையும் இலங்கையின் எந்தவொரு சிங்களத் தலைவரும் கடந்த காலங்களில் கொண்டிருக்கவில்லை. இப்போது உள்ளவர்களும் அத்தகைய தலைமைத்துவங்களின் வாரிசுகளும், அவர்களின் நீட்சியுமே ஆவார்.

இந்நிலையில் யாருக்கு வாக்குரிமை வழங்கவேண்டும்? யாருக்கு வழங்கினால் நாட்டின் எதிர்காலம் சுபீட்சமாக அமையும்? யாருக்கு வழங்கினால் தமிழினம் தலைநிமிர முடியும்? போன்ற பல சிந்தனைகளைத் தீர்க்கதரிசனப் பொறிகளாகப் பறக்கவிட்டு மிகப்பொருத்தமானவருக்கு எமது பெறுமதியான வாக்கினை வழங்கி எமது உரிமைகளை வென்றெடுப்போம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவான அருட்பணி நிரூபன் அடிகளாரின் அன்புத் தந்தையார் **அதிபர் சிங்கராயர் தார்சீசியஸ்** அவர்கள் கடந்த 11.10.2019 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம். **பாதுகாவலன் குடும்பம்.**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு - 2019

1. இத்தேர்வு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறும்.
2. கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள கத்தோலிக்க மறைப்பாடசாலைகளுக்கு விண்ணப்பப்படிவங்களும், அறிவுரைகளும் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
3. விண்ணப்பப்படிவங்கள் கிடைத்திராத அல்லது போதுமானதாக இல்லாத மறைப்பாடசாலை அதிகாரிகள் கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரத்தில வருகை தந்து அல்லது தமது வேண்டுகோளை முன்வைப்பதற்காக விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால், தொலைநகல், அல்லது வலைத்தளத்தின் மூலம் விண்ணப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை திணைக்கள வலைத்தளத்தின் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.
4. இத் தேர்வுக்கு வெளி விண்ணப்பதாரர்கள் தோற்றுவதற்கு அனுமதி இல்லை. ஆயினும் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியுடைய விண்ணப்பதாரர் தமக்கு அண்மையிலான கத்தோலிக்க மறைப்பாடசாலை மூலம் பரீட்சைக் கட்டணத்தைத் தபால் - உபதபால் அலுவலகத்தில் அல்லது வட்டார செயலகத்தில் அல்லது பிராந்திய செயலகத்தில் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.
5. சரியாக நிரப்பிய விண்ணப்பப் படிவத்தை 2019-10-19க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் அனுப்புவதற்கான முகவரி : **பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல.**

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு – 2019

இலங்கைக் கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் தேர்வு இம்மாதம் (ஐப்பசி) 26ம் திகதியும் (சனிக்கிழமை) எதிர்வரும் மாதம் (கார்த்திகை) 02ம் திகதியும் (சனிக்கிழமை) என இரு நாட்களாக நடைப்பெறவுள்ளது. பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரம் பங்கு தந்தையர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாதகல் பங்கில் மறைக்கல்வி வாரம்

அழைத்தல் ஆண்டில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்ற கருப்பொருளில் மறைக்கல்வி விழா வானது புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத் தந்தை தலைமையில் திருத்தந்தையின் கொடியேற்றலுடன் விழாத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி R.H சகாநாயகம் அடிகளார் தலைமையில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. A.F.பெனட் அடிகளார் கலந்துகொண்டு சிறப்பித்தார். மாண வர்களது பாடல்கள் நடனங்கள் மறையறிவுசார் பேச்சு மற்றும் இறைதேடல் எனும் நாடகமும் மறைக்கல்வி விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட் போட்டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள் ஆனாலும் இம் மறைக்கல்வி வாரத்தில் மறைக்கல்வி சார் போட்டிகளையும் மற்றும் விசேட நிகழ்வாக சுகந்திரபுர பங்கு மறையாசிரியர்களுடனான கலந்துரையாடலும் அனுபவப் பகிர்வும் இடம் பெற்றது.

வலயர்மடப் பங்கில் மறைக்கல்வி மாணவர்களுடனான ஒன்றுகூடனான ஒன்று கூடல் நிகழ்வும் நடைபெற்றன. இம் மாணவர்களுக்கான ஒன்று கூடலுக்கான செயற்பாடுகள் யாவற்றினையும் வலயர் மடப் பங்குத்தந்தை அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் மேற்கொண்டிருந்தார். எனவே மாதகல் பங்கு மறைக்கல்வி வார செயற்பாடுகள் அனைத்தினையும் பங்குத்தந்தை சிறப்பாக முன்னெடுத்து நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இளையோர் கல்வி

1ம் பக்கத் தொடர்ச்சி

தலைமை அமைச்சர் ஆயரிடம் ஏனைய நாடுகளில் உள்ளதுபோல் கத்தோலிக்க தனியார் பல்கலைக்கழகங்களை வடக்கில் ஆரம்பியுங்கள். அதற்கான தமது உதவிகளைத் தாம் புரிவதாக வாக்குறுதி கொடுத்தார்.

ஆயரின் இரண்டாவது கோரிக்கையாக மகாவலித் திட்டத்தின் கீழ் வெலிஓயா சிங்களக் குடியேற்றத்தின் வழியாகத் தமிழர் பலர் தமது சொந்த இடங்களில் இருந்து புலம்பெயர்ந்து ஏதிலிகளாக வாழ்கின்றனர். அவர்கள் தொழில் செய்த விளை நிலங்கள் இன்று அவர்களுக்கு இல்லை. ஆகவே உடன் அவர்களையும் அவர்களின் சொந்த நிலங்களுக்கு அனுப்பி, அவர்களும் சிங்கள மக்களுடன் அங்கு இணைந்து வாழும் சூழலை ஏற்படுத்தி, இன ஒற்றுமையான வாழ்வுக்கு வழி சமையுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

மூன்றாவதாக, படையினரிடம் கைவசமிருந்த தமிழர் வாழ் நிலங்கள் 75 வீதமானவை மீண்டும் கையளிக்கப்பட்போதிலும் 25 வீதமான இடங்கள் தொடர்ந்தும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவற்றையும் முழுமையாகக் கையளிக்க வேண்டிய நடவடிக்கையை எடுங்கள் என்றார்.

ஆயர் அவர்கள் மேலும் தலைமை அமைச்சரிடம் கூறுகையில், உண்மையிலேயே சர்வதேச விமான நிலையத்தை யாழ் நகரில் திறந்து வைத்தமை மகிழ்ச்சியானதும், நன்மை பயக்கக்கூடிய ஒன்றும் ஆகும் எனக் கூறினார். காரணம், சர்வதேச ரீதியில் தமிழர் வாழ் நகரான யாழ்ப்பாணம் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு விமான போக்குவரத்தின் காரணமாக எதிர்காலத்தில் பல வேலை வாய்ப்புக்களும், உல்லாசப் பிரயாணத் துறையும் மிகவும் வளர்ச்சி காணவுள்ளது. இத்திட்டத்தை செயற்படுத்திய உங்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள் எனத் தெரிவித்தார்.

ஆயர் மேலும் கூறுகையில், சிங்களவர்கள் ஒரு போதும் வடக்குகிழக்கு அபிவிருத்தி மட்டில் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததில்லை. ஆகவே நீங்கள் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் நான் கேட்டுக் கொண்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்துங்கள். கடந்த ஆட்சிக்காலத்தில் உங்களிடம் பல நல்ல திட்டங்கள் இருந்தன. ஆனால் அரசியலில் இருந்த ஒவ்வா நிலைமைகளினால் அவற்றை உங்களால் செயற்படுத்த முடியவில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின் தங்களின் திட்டங்களை புதிய நாட்டின் தலைமையுடன் இணைந்து செயற்படுத்த எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன் என ஆயர் குறிப்பிட்டார்.

2018 ஆம் ஆண்டு உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பு

மறைமாவட்டம்	தொகை
அனுராதபுரம்	100,200.00
பதுளை	114,197.00
சிலாபம்	764,350.00
கொழும்பு	2,875,550.00
காலி	151,000.00
யாழ்ப்பாணம்	981,643.00
கண்டி	244,762.00
குருநாகல்	530,840.00
மன்னார்	6,654,612.00
இரத்தினபுரி	217,812.00
மட்டக்களப்பு	87,140.00
திருகோணமலை	210,440.00

அரங்கேற்றம் 06

(சென்றவாரத் தொடர்ச்சி....)

வாழ்வியற் திறன்கள்

உங்களோடு மனம்விட்டுப் பேசுவதற்காக, உங்களோடு நல்லுறவு கொள்வதற்காக நான் உங்களை அழைக்கின்றேன். அழிவுக் கலைகளை அம்பலப்படுத்துவதற்காக அன்று, மாறாக, உங்களது வாழ்வியற் திறன்களை வளர்ப்பதற்காக நான் உங்களை அழைக்கின்றேன். அழவைப்பதற்காக அன்று, மாறாக, மகிழ்வோடு சிரிக்கவைப்பதற்காக, உங்களை நல்லவர்களாக வாழ வைப்பதற்காக, புதிய திறனாளிகளுக்கான சூழலைத் தோற்றுவிப்பதற்காக நான் உங்களை அன்போடு அழைக்கின்றேன். நாளை என்று பின்போடாமல் உடனடியாகப் புது வாழ்வுப் பயணத்தை ஆரம்பியுங்கள். நல்ல சமூக உருவாக்கத்திற்கு நாம் எல்லோரும் இணைந்து பங்களிப்பு நல்கவேண்டும். நம்பிக்கை நட்சத்திரங்களாகச் சமுதாயத்தில் உருவெடுத்து வெளிச்சம் கொடுக்க விரைந்து வாருங்கள். பிள்ளைகளே கவனியுங்கள். கல்லூரியில் கல்வி கற்று முடிந்ததும் கடமை முடிந்தது எனச் சிலர் தூங்குகின்றார்கள். பரீட்சைக்கு மட்டும்தான் படிப்பு, வாழ்க்கைக்கு அல்ல எனச் சிலர் தடுமாறுகின்றார்கள். வாலிப வயதை வயோதிப நிலைக்கு மாற்றிவரும் கயவர்களோடு இணைந்து, உங்களைத் தொலைத்து விடாதீர்கள். வயிறு வளார்ப்பதற்காக மட்டும் உயிர்வாழாது, பொன்னான நேரத்தை மண்ணாக்காது, திறன்களை இனம்கண்டு, உங்களது ஆற்றல்களை, உங்களது சிறப்பியல்புகளை இரட்டிப்பாக்குங்கள்.

இளையோரே, உலக ஈர்ப்புக்களுக்கு இரையாகாது, மனிதத்தை நேசிக்க முன்வாருங்கள். வழிமேல் விழி வைத்து விழிநீர் துடைத்திட, ஏழைகளின் கண்ஓரீருக்கு வடிகால் அமைத்திட வாருங்கள். வழிகாட்டிகளாக வாழுங்கள்.

மகிழ்வின் மலர்வு

இங்கிரீட் பொக்மேன் சுவீடன் நாட்டு பிரபல நடிகையாவார். நாற்பது ஆண்டுகளாக சர்வதேச நட்சத்திரமாகத் திகழ்ந்த அவர் வாங்காத பரிசுகள் இல்லை. குவிக்காதசெல்வம்இல்லை. ஓஸ்கார் பரிசு மூன்று முறை வாங்கியவர். பெண்மையின் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் இங்கிரிட் வாழ்ந்து காட்டினார். எதற்காகவும் தன்மானத்தை இழக்காது விருப்போடு வாழ்ந்தார். ஐம்பது வயதில் மார்புப் புற்றுநோயிற்கு ஆளாகி, 1974ல் மார்பு அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார்.

1985ல் தொலைக்காட்சியில் இஸ்ராயேல் பிரதமர் கோல்டன் மேயராக நடிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. “மற்ற வர்களுக்கு மகிழ்ச்சி என்றால் அது

எனக்கும் மகிழ்ச்சியே” என்று ஏற்றுக் கொண்டார்.

இளையோரே, ‘இயலாது’ என்று பின்நோக்கி நகராமல் ‘இயலும்’ என்று முன்நோக்கிப் பாயுங்கள். இதுவே மகிழ்வான வாழ்விற்கான படிக் கல்லாகும். மகத்துவமான எண்ணங்களின் எச்சமாக மகிழ்வே எஞ்சி நிற்கின்றது. தமக்காக உயிர் பிழைக்கும் தனிமரங்கள் கனி தரமாட்டா. தனிமரம் தோப்பாகாது. சோகம் போன்ற புயலைச் சோரம் போகவிட்டு, சாதனை வீரராகிச் சரித்திரம் படையுங்கள்.

துணிச்சல்

“உச்சிமீது வானிடிந்து
வீழுகின்றபோதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை,
அச்சமென்பதில்லையே”

என்று வீரமுழக்கம் இட்டார் பாரதியார்.

“கொலை வாளினை எடடா,
ஆந்தக் கொடியோர் செயல் அறவே”

என்று அதர்மத்தை அழிக்க வழிகாட்டினார் பாரதிதாசன்.

“அச்சம் உள்ளடக்கி அறிவு
அகத்தில்லாக் கொச்சை மக்களைப்
பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை
நன்றே”என்று வெற்றிவேற்கையில்
அதிவீர ராமபாண்டியன் கூறினார்.

அதாவது, பயந்தாம்கொள்ளியான, பயனற்றதுமான பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும் பிள்ளையில்லாது வாழ்வது நன்று என்பதாகும். வீரமான, தீரமான இளம் சமுதாயத்தைப் படைக்கும் பொறுப்பில் நீங்களும் பங்கேற்க முனையுங்கள்.

அடிமைநிலையை ஒழித்து, அழிவுநிலையை அழித்து, அன்பு, துணிவு போன்றவற்றை ஆயுதங்களாகக் கொண்டு, தீமைகளை எதிர்த்துப் போர்புரியும் சமுதாயத்தைப் படைக்க, இளையோரே, ஒன்றுசேருங்கள். மனிதனுக்கு மனிதன் பயந்துவாழும் சூழலை மாற்றியமைக்க முன்வாருங்கள்.

✓ எதனைக் கண்டு பயந்தீர்களோ அதனையே செய்ய ஆரம்பியுங்கள்.
✓ எல்லையில்லா அன்பினை ஆதாரமாக் கொள்ளுங்கள்.
✓ எதிர்நீச்சல் போடக் கற்றுக் கொள்ளுங்கள்.
✓ உள்ளத்தில் துணிச்சலான சிந்தனைகளை வளருங்கள்.
✓ உண்மையாக நடந்து கொள்ளுங்கள்.
✓ உவகை வெள்ளத்தில் நாளாந்தம் குளியுங்கள்.

7. அழகியல்

அழகு என்பது புதிய உளவியல் சிந்தனையின்படி எமது கண் ணோட்டத்தில் தான் தங்கியுள்ளது. அதாவது எந்தவொன்றையும் அது அழகானது என நினைத்தால் அது அழகானதாயும் அழகற்றது என நினைத்தால் அது அழகற்றதாயும் காட்சியளிக்கும். இதனையே கௌதம புத்தர் பின்வருமாறு கூறுகின்றார். “உங்களது சிந்தனைகள் பொருட்களை அழகாகவோ அன்றேல் அழகற்றவையாகவோ காட்டுகின்றன. முழு உலகும் எங்கள மனத்தில்தான் உள்ளது. எமது மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும் இன்பத்தைத் துன்பமாகவும் எடுத்துக் கொள்கின்றது. என்று சீரியமுறையில் சிந்திப்பதற்கான வழிகாட்டலை முன்வைத்தார் சுபாஸ் சந்திரபோஸ்.

மனத்தூய்மை

மனிதன் தனது மனத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்து இயங்க வேண்டும். மனத்திலிருந்து தூய்மை இழக்கப்படும் பொழுது மனம் வருத்தத்திற்கும் வேதனைக்கும் உள்ளாக்கப்படுகின்றது. உடல் அழகை நீரினால் அல்லது கழுவுவதற்கான பொருட்களினால் மாற்றுவது சுலபம். ஆனால் மனத்தைத் தூய்மைப்படுத்துவது கடினம்.

“பாலைவனத்தில் பயிர் ஏது? அது போல பாழ்பட்ட மனதில் சிந்தனைக்கு இடமேது? உரிமை உணர்ச்சி ஏது? எதுவும் கூறமுடியாது” என்று அறிஞர் அண்ணா எதிர்வு கூறினார்.

“நெல்லைக் குற்றும்பொழுது அவ்வப்போது குற்றுவதை நிறுத்திவிட்டு உமி போயிற்றா என்று பார்ப்பது போல மனதினையும் இடையிடையே சோதித்தல் வேண்டும். எடுத்த தீர்மானம் சரியா என்று அடிக்கடி சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்” என்று ஸ்ரீ இராமகிருஸ்ணர் சிறப்பாக மொழிந்தார்.

அழகியற் கலைகளை மனத்தில் பதித்தவர்களாய் உங்கள் வாழ்வில் இனன்பம் காண இனிதே முனையுங்கள். இதய இராகங்களைள் இசைத்து இதயத்தில் களி பேருவகை கொள்ளுங்கள். உங்

அருட்பணி
வின்சன் பற்றிக் (அமதி)

களை ஏற்றுக் கொண்டு வாழ்வியற் கல்விக்கு விளக்கம்கொடுங்கள். உங்களில் நிலவும் அழகினை நிறைவாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு வீட்டில் தனியே இருந்த மனைவியைப் பார்த்துக் கணவர் கூறினார்:
“என் அன்பே, ஆருயிரே, உனது அழகில் மயங்குகிறேன்.
நீ இல்லாமல் நான் இல்லை.
என் வாழ்வின் முழுமை நீயேதான்.”
அதே பெண் வெளியே போகும்பொழுது, அவளது தோற்றப்பாட்டைச் சகிக்கமுடியாத ஒருவர் தனது நண்பனிடம் கூறுகின்றார்:
“இதோ பார் ஓர் உருவம். இதுகளெல்லாம் வீட்டில முடங்கிக் கிடக்காம கிடக்க முடியாம தெருவில திரியுதுகள்.”

ஒரு பெண் இருவராலும் முரண்பட்ட நிலையில் விமர்சிக்கப்படுகின்றாள். ஒருவரால் ‘அழகி என அழைக்கப்படுகின்றவா இன்னொருவரால் அவலட்சணம்’ என விமர்சிக்கப்படுகின்றார்.

(தொடரும்...)

ஞானேஸ்வரி

எரித்து விடு

உங்களில் ஒவ்வொருவரும் தம் மனைவியைத் தூயவராகக் கருதி மதிப்புடன் நடத்த அறிந்திருக்க வேண்டும்” (1 தெச 4:4)

சுரேன் அந்த பஸ்வண்டியில் ஏறி வசதியாக உட்கார்ந்திருந்தாலும் இனம் புரியாத... ஒருவிதமான படபடப்பும், குற்ற வுணர்வும் அவன் மனதில் எழுந்து அலைக்கழித்த வண்ணமே இருந்தன. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின் பின் தன் மனைவியையும், குழந்தைகளையும் பார்ப்பதற்காகவும், தன்கூட வாழ்வதற்காகவும் அழைத்து வருவதற்காகப் புறப்பட்டிருக்கின்றான். அவள் வருவாளா? தன்னோடு அவள் குடும்பத்தினர் அனுப்பி வைப்பார்களா என்று மனம் கேள்விகேட்டது. மனைவியின் அண்ணன் மாரையும், அவர்களது சிவந்த கண்களையும், மீசைகளையும் நினைக்கும்போதே அடிவயிற்றில் பகீரென்றிருந்தது. ஆயினும், அந்த முரடர்களின் கால்களில் விழுந்தாவது தன் மனைவியை அழைத்துவரவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

அந்த பிரிவுக்குக் காரணமே அவனுடைய மூர்க்கத்தனமான கோபம்தான். காரணமேயில்லாமல் கோபப்படுவதும், வாய்க்கு வந்தபடி திட்டுவதும், இடம் பொருள் ஏவல் பார்க்காமல் அவளைக் கை நீட்டி அடித்து அவமானப்படுத்துவதும் அவனுக்குத் தவறாகப்பட்டதேயில்லை. அவனது மனைவி நன்கு படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் கிராமத்துப்பெண் என்பதால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள். ஒரு தடவை உறவினர் வீட்டுக் கல்யாணத்தின்போது குழந்தை கீழே விழுந்து விட்டதால் அவனுக்கேற் பட்ட கோபத்தில் அத்தனை ஆட்கள் முன்பாகவும் பிள்ளையைக் கவனிக்காமல் வம்பளந்து கொண்டிருந்தாள் என்ற குற்றம் சாட்டி பளாரென்று அறைந்து விட்டான்.

அந்தக் கல்யாணத்திற்கு வந்திருந்த கிராமத்து உறவினர்கள் மூலம் செய்தியைக் கேள்விப்பட்ட மனைவியின் அண்ணன்மார், மீசை துடிக்க வந்து தங்கையையும் குழந்தைகளையும் அழைத்துசென்றுவிட்டனர். அன்று அவன் வீட்டில் இருக்கவில்லை. இருந்திருந்தால் வெட்டிப் போட்டிருப் பார்கள். இந்த இரண்டு வருடங்களில் சுரேன் தன் மனைவியைத்தேடிப் போகவில்லை. “ஓடுகாலி... அவள் போனது போலவே திரும்பி வரட்டும்” என இருந்து விட்டான். ஆனால் சமீப காலமாக அவன் மனதுக்குள் ஒரு வேதனைதோன்றி அலைக்கழித்துக் கொண்டிருந்தது. தன்நண்பர்களையும் குடும்பங்களையும் பார்க்கும்போது மனைவி குழந்தைகளின் ஞாபகம் இலேசாகத் தோன்றத் தொடங்கியது. தன் தவறுகளை உணரத் தொடங்கியிருந்தான். சென்ற வாரம் ஞாயிறு திருப்பலியில் குருவானர் அன்னை மரியாளைப் பற்றி அற்புதமாக எடுத்துக் கூறினார்.

அந்த வார்த்தைகள் அவனது உள்ளத்தை நார்நாராகக் கிழித்தன. அன்னை மரியாள் இறைவனின் திட்டத்துக்குப் பணிந்து, இயேசுவைப் பெற்றுக் கொள்வதற்காக, இந்த உலகம் தன்னைத்தூற்றும், அவமானப்படுத்தும் என்று தெரிந்தும் ஒரு பெண்ணுக்கே உரிய உன்னதமான கன்னிமையை எரித்து இயேசுவைப் பெற்றாள். மாதா பாவம் செய்யாத தாய். நாங்களோ பாவிகள். நீங்கள் எதை எரித்து எந்த தீய குணத்தை எரித்து இயேசுவைப் பெறப்போகிறீர்கள்?

நீ காமுகனாக இருந்தால் காமத்தை எரித்துவிடு. நீ பொய்யனா..உன் பொய்யை எரித்துவிடு. நீ கோபக்காரனா... உன் உறவுகளைத் தூக்கி வீசி எறிபவனா.. உன் கோபத்தை எரித்துவிடு. நீ பொறாமைப்படுபவனா.. உன் பொறாமையை எரித்துவிடு. நீ பேராசைக் காரனா... பேராசையை எரித்துவிடு...”குருவானவரின் வார்த்தை அவனைப் புடம் போட்டன. எரித்துவிடு... எரித்துவிடு என்ற வார்த்தைகள் அவனை சுற்றிச்சுற்றி வந்தன.

குருவானவரிடம் சென்று பாவ மன்னிப்புக் கேட்டபின் ஒன்றுக்குமேயுதவாத அவனது கோபத்தையும், அகங்காரத்தையும் விட்டவனாக, குருவானவர் கூறிய படி அனைத்தையும் எரித்துவிட்டு இதோ கிளம்பி விட்டான் தன் குடும்பத்தை அழைத்துவர. அவன் பயணம் வெற்றி பெறட்டும்.

காவலன் கலசம்

என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி. செ. அன்புராசா அமதி

(செபா, கொழும்பு)

கேள்வி: குறித்த நேரத்தில் உண்பது நல்லதா? அல்லது பசிக்கும்போது உண்பது நல்லதா?

ப : செபா, குறித்த நேரத்தில் உண்பது நல்லதா அல்லது பசிக்கும்போது உண்பது நல்லதா எனக் கேட்கின்றீர்கள்!... நீங்கள் விரும்பியபோது உண்ணுங்கள்! ஆனால், செல்வமுடைய சிலர் நினைக்கும்போது உண்கிறார்கள், ஏழைகளான பலர் கிடைக்கும்போது பசியாற்றுகிறார்கள்!

(முதன், மன்னார்)

கே: மிகச் சிறந்த பரிசுப்பொருளாக எதனைக் கொடுக்கலாம்?

ப: மதன், நூல்களைப் பரிசுப்பொருளாகக் கொடுக்கும், அன்பளிப்புச் செய்யும் பண் பாட்டினைப்பழக்கத்துக்குக்கொண்டு வாருங் கள். நீங்கள் அறியாமலே சமுதாயத்தில் அறிஞர்களை உருவாக்கிவிடுவீர்கள்.

(அருள், மன்னார்)

கே: நீங்கள் எரிச்சல்படுகின்ற தருணங்கள் எவை?

ப: அருள், மேடைகளில், வானொலி யில் அர்த்தமே இல்லாமல் சிலர் அலம்பிக்கொண்டிருக்கும் தருணங்களில்!

(விஜி, வவுனியா)

கே: மற்றவர்கள் உதவிஒத்தாசைகளை எதிர்பார்க்கின்றபோது அவர்களுக்கு எவ் வகையான உதவிகளைச் செய்யலாம்?

ப: விஜி, 'பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றைப் பிறருக்கு நீங்கள் செய்யுங்கள்!'

(ஆனந்தன், கிளிநொச்சி)

கே: ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கும் இந் நேரத்தில் தென்பகுதியைச் சேர்ந்த முக்கிய ஒருசில கட்சிகள் வடக்கிலும் கிழக்கிலும் தங்கள் பிரசார நட வடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்ற னர். என்ன காரணமோ?

ப : ஆனந்தன், கணக்கிட்டுப் பார்க்கின்ற போது வெல்ல இருப்பவர் பெரும் வாக்குவீதத் தில் வெல்லப்போவதில்லை என்பது தெரிய வரும்! வெற்றிபெற சில இலட்ச வாக்குகள் தேவைப்படுகின்றன! அவற்றை வடகிழக் கில் சுருட்டலாம் என்ற நப்பாசையில் சுற்றித்திரிய ஆரம்பித்திருக்கின்றார்கள்!

(நாயகி, யாழ்ப்பாணம்)

கே: மனித வளங்கள் நிறைய இருந் தும் தலைமைப் பதவிகளில் உள்ள பெரியவர்கள் தங்களுக்குக்கீழே உள்ள வர்களின் ஆற்றல்களைப் பயன்படுத் தாததற்கான காரணம் என்னவோ?

ப: நாயகி, தாங்கள் சிறியவர்களாகி விடலாம் என்ற காரணத்தினால் சிறியவர்களை

கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

பெரியவர்கள் ஆக்காமல் வைத்திருப்பது ஒரு காரணம்!

(வதனி, முல்லைத்தீவு)

கே: அநேக அரச அலுவலகங்களில் அநேகமான அலுவலர்கள் சும்மா தானே இருக்கின்றார்கள்! பொறுப் புணர்ந்துவேலை செய்யலாம் தானே! அல்லது பொறுப்பில் உள்ளவர்களா வது இவர்களுக்குக் கொஞ்சம் வேலை களைக் கொடுக்கலாம் அல்லவா?

ப: வதனி, நான்கு பேர் செய்கிற வேலைக்கு நாற்பது பேர் நியமிக்கப்பட்டால் பொறுப்பில் உள்ளவர்களால் என்ன செய்யமுடியும்! இப்போதைக்கு அவர்கள் சும்மா இருந்தால் பரவாயில்லை, அவர்கள் சோம்பேறிகள் ஆகாமல் இருந்தாலே போதும்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)

கே: தன்னை வந்து சந்தித்த இலங்கை யின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு, 'சர்வதேசத்தின் நியாய மற்ற குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க உறுதியுடன் இருக்க வேண் டும்' எனப் பேராயர் மல்கம் கருதினால் ரஞ்சித் தைரியம் ஊட்டியிருக்கின்றார். பல சான்றுகளையும் சாட்சிகளையும் வைத்துக்கொண்டே சர்வதேச சமூகம் இவரின் மனுக்குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யுமாறு கோருகின்றது. இச்சூழலில் பேரா யரின் நிலைப்பாடு இவரின் மனிதப் படுகொலைகளை மூடிமறைப்பதாக அல்லவா அமைகின்றது! இயேசு இன்று நடமாடிக்கொண்டு இருந்தால் இப்படியான பேர்வழிகளைச் சாடியி ருக்க மாட்டாரா?

ப: அன்ரன், 'நீரே கூறிவிட்டீர்!' பின் ஏன் என்னை இதற்குள் இழுக்கிறீர்?

(ஜெயா, யாழ்ப்பாணம்)

கேள்வி: பல ஆண்டுகள் பழைமை யான செம்மலை நீராவியடிப் பிள்ளை யார் ஆலய வளாகத்தில் புத்த பிக்கு ஒருவர் அடாத்தாக வந்து அவ்விடத்தை ஒருசில ஆண்டுகளாக உரிமை கொண்டாடியதும், பின் அவர் நோய்வாய்ப்பட்டு இறந்தபோது நீதி மன்ற உத்தரவையும் மீறி அவ்வாலய வளாகத்தில் அவரது இறுதிக் கிரி கைகள் நடந்தேறியதும் யாவரும் அறிந்ததே. நீதிமன்ற உத்தரவை மீறி இவர்கள் நடந்தது சரியா?

ப: ஜெயா, சில மாதங்களுக்கு முன், யாழ்ப்பாணத்தில் தேரரின் காலில் விழுந்து கும்பிட்டவர்களிடம் கேளுங்கள் அல்லது யாழ்ப்பாணத்திற்கு அவர் வரும்போது அவரது காலில் விழுந்து கேளுங்கள், சொல்லுவார்கள்!

(மேரி, மன்னார்)

கே: அடிக்கடி புறுபுறுத்துக்கொண்டி ருக்கும் கணவனை எப்படிச் சமா ளிக்கலாம்?

ப:: மேரி, பின்வருமாறு பதில் சொல்லிப் பாருங்கள்! நிலைமை சரியாகும் அல்லது விரிவாகும்! ஒருதடவை கணவன் மனை வியைப் பார்த்து, "உன்னைக் கட்டியதற்கு ஒரு எருமைமாட்டைக் கட்டியிருக்கலாம்!" என்கிறான். உடனே அவள் பதிலாக, 'அதற்கு, அது ஒத்துக்கணுமே!' என்றாளாம்.

உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com **என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு** sms, viber **அல்லது** whatsappக்கோ **அனுப்பி வைக்கலாம்.**

திருமுழுக்கு பெற்று அனுப்பப்படுகின்றீர்கள் திருத்தந்தையின் உலக மறைபரப்புச் செய்தி

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

ஐப்பசி 2019ம் ஆண்டில் திருத் தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் அவர்களின் அப்போஸ்தலிக்க மடலின் மக்சிமம் இருட் (Maximum illud) இன் நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் போது முழுத்திருஅவை யையும் அதன் மறைபரப்பில் விழிப்புணர் வையும், அர்ப்பணிப்பையும் புதுப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண் டேன் என்று கூறியுள்ளார். அப்போஸ்தலர் களின் தொலைநோக்கு மற்றும் தீர்க்க தரிசனப் பார்வை திருஅவையின் மறை பரப்பில் உறதிப்பாட்டைப் புதுப்பிப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் எனக்கு உணர்த்தியது. மேலும் நற்செய்தி அறிவிக் கும் பணிக்கு புதிய தூண்டுதலைக் கொடுத்து, இறந்து மீண்டும் உயிர்த்தெழுந்த இயேசுக் கிறிஸ்துவின் மீட்பை உலகிற்குக் கொண்டு வருதலாகும்.

தற்போதைய மறைபரப்பு மாதத் தின் தலைப்பு "திருமுழுக்குப்பெற்று அனுப் பப்படுகின்றீர்கள்" அதாவது கிறிஸ்துவின் திருஅவை பற்றி உலகில் மறைபரப்பு. இம்மாதத்தை முதலில் கொண்டாடுவது, இயேசுக்கிறிஸ்துவில் நம்முடைய விசு வாசத்தின் மறைபணி பரிமாணத்தை மீண்டும் கண்டுபிடிப்பதற்காகும். இவ்விசு வாசம் எமக்குத் திருமுழுக்கின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளுடன் எமக்கு உள்ள உறவு வெறுமனே தனிப்பட்ட ஒன் றல்ல, எப்போதும் திருச்சபையுடன் தொடர் பான ஒன்றாகும். நாம் அனைவரும் தந்தை, மகன், தூய ஆவியாருடன் நமக்கிருக்கும் ஒற்றுமையின் மூலம் நம்முடைய சகோதர, சகோதரிகளுடன் இணைந்து புதிய வாழ்வில் பிறப்பிக்கப்படுகின்றோம்.

இந்தத் தெய்வீக வாழ்வானது விற் பனைக்குக் கொடுக்கப்படும் ஒரு தயாரிப்பு அல்ல. மதமாற்றத்தை எம்மில் ஏற்படுத்து வதுமில்லை, ஆனால் தொடர்பு கொண்டு மறையுரைப்பதற்கேயாகும். இதற்கான புதையல் எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே மறைபரப்புப் பணியின் அர்த்த மாகும். யாரையும் ஒதுக்கி வைக்காமல் நாம் இலவசமாகக் பெற்றுக்கொண்ட இந் தப் பரிசை நாம் இலவசமாகக் கொடுக்க வேண்டும்" (மத் : 10:8), "எல்லா மனித ரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விருப்பினார்"(1திமொ. 2:4).

திருஅவையானது உலகப் பணி யில் செயற்படுகின்றது. கடவுளின் சொந்தக் கண்களாலும், இதயத்துடனும் உலகைப் பார்க்கின்றபோது, இயேசுக்கிறிஸ்துவின் மீது உள்ள விசுவாசமானது எல்லா வற்றையும் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க எமக்கு உதவுகின்றது. நாம் பகிர்ந்து கொள்ளும் தெய்வீக வாழ்க்கை யின் நித்திய எல்லைக்குள் செல்ல நம்பிக்கை வழிவகுக்கின்றது .சடங்குகளி லும், சகோதரத்துவ அன்பிலும் நாம் முன் னறிவித்திருக்கும் தர்மம், உலகின் கடை எல்லை வரைக்கும் செல்ல நம் மைத் தூண்டுகின்றது. (மத் 28:19, அப்.1:8, உரே 10:18) தொலைதூர எல்லை களுக்கு முன்னோக்கிச் செல்லும் திரு அவைக்கு நிலையான மற்றும் தொடர்ச்சி யான மறைபரப்பு மாற்றம் தேவைப் படுகின்றது. இந்த வரம் பெற்ற திறந்த தன்மை, கருணையுடன் வெளிவருவது உண்மையில் சாத்தியமானதும், யதார்த் தமானதும் என்பதற்குப் பல புனிதர்களும், ஆண்களும், பெண்களும் சாட்சிகூறுகின்ற னர். ஏனெனில் இது அன்பினால் இயக்கப் படும் தியாகம் மற்றும் நன்றியுணர்வு மாகும். (2கொரி. 5:14-21) கடவுளைப் பற்றி அறிவிக்கும் மனிதன் கடவுளின் மனிதனாக இருக்கவேண்டும்.

இந்த மறைபரப்பு ஆணை தனிப்பட்ட முறையில் நம்மைத் தொடு கின்றது. நான் ஒரு பணியாள், எப்போதும் நீங்களும் ஒரு பணியாள், திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒரு பணியாள். அன்பில் உள்ளவர்கள் ஒருபோதும் அசையாமல் இருப்பார்கள். அவர்கள் ஈர்க்கப்படுகின்றார்கள். மற்றவர் களையும் ஈர்க்கின்றார்கள். அவர்கள் தங்களை மற்றவர்களுக்குக் கொடுத்து, அர்ப்பணிப்பின் உறவை உருவாக்குகின் றார்கள். கடவுளின் அன்பைப் பொறுத்த வரை யாரும் பயனற்றவர்களோ, அற்ப மானவர்களோ அல்ல. ஒவ்வொருவரும் உலகின் பணியாளர்கள். நாம் ஒவ் வொருவரும் கடவுளின் அன்பின் பிரதி பலன். பெற்றோர்கள் பொய், வெறுப்பு மற்றும் துரோகத்தால் தங்களின் அன்பிற் குப் பிரமாணிக்கமற்றவர்களாக இருந்தா லும் இறைவன் கொடையாகக் கொடுத்த வாழ்வை திருப்பி எடுப்பதில்லை. நிரந்தர மாக அவர் தனது பிள்ளைகள் நித்திய வாழ்க்கையில் பங்குகொள்ள விதித்துள் ளார். (எபே. 1:3-6)

திருமுழுக்கின் மூலம் இந்த வாழ்க்கை எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பாவத்தையும் மரணத்தையும் வென்ற இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் கொள் ளும் பரிசை எமக்கு வழங்குகின்றது. திரு முழுக்கு கடவுளின் சொந்த உருவத்தி லும், ஒற்றுமையிலும், நமக்கு மறு பிறப்பை அளிக்கின்றது. அத்தோடு கிறிஸ்து வின் உடலாகிய திருஅவையின் உறுப் பினர்களாக ஆக்குகிறது. எனவே உண் மையாகவே மீட்பிற்கு ஞானஸ்தானம் அவசியமான ஒன்றாகும். ஏனென்றால் நாம் அனைவரும் எம் தந்தையின் மக் கள் என்பதை உறுதி செய்கின்றது, நாம் ஒருபோதும் அநாதைகளோ, அடிமை களோ, அன்னியர்களோ அல்ல. கிறிஸ்தவ வாழ்வின் உண்மை நற்கருணை எனும் அருட்சாதனத்தின் நிறைவில் காணப்படு கின்றது .அழைப்பில் நிலைத்துள்ள ஒவ் வொரு ஆணும், பெண்ணும் மாற்றத்தி னையும், மீட்பினையும் தேடுகின்றனர். திருமுழுக்கு இறைவனின் கொடையான வாக்குறுதியை நிறைவேற்றி எல்லோ ரையும் அவரின் பிள்ளையாக ஒன்றி ணைக்கின்றது.

நாம் எமது ஆதிப்பெற்றோரின் பிள்ளைகள். ஆனால் திருமுழுக்கினால் நாம் ஆதித் தந்தையினதும், உண்மைத் தாயின் தன்மையினையும் பெறுகின் றோம். *(தொடர்ச்சி 11ம் பக்கம்)*

சதா சகாய மாதா
(Our lady of Perpetual Help)

சதாசகாய மாதா (சதா சகாயத் தாய் - அன்னை அல்லது இடைவிடா சகாய மாதா (Our lady of Perpetual Help) **என்னும் பெயர் இயேசுவின் தாயாகிய மரியாவுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். இலத்தீன் மொழியில்** "Sancta Mater de Perpetuo Succursu" **என வழங்கப்படும்.**

இப் பெயரைத் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் மரியாவை அழைக்கப் பயன்படுத்தினார். இப்பெயர் கி.பி 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிசான் தியக் கலையில் அமைந்த ஒரு மரியா திரு உருவ ஓவியத்தோடு தொடர்புடை யதாகும்.

கிரேக்க நாட்டின் தீவுகளுள் ஒன்றாகிய கிரேத்து (crete) பகுதியின் தனிப்பாணி இத் திரு ஓவியத்தில் துலங்கு கின்றது.

சதாசகாய அன்னையின் திரு உருவ ஓவியத்தின் வரலாறு

இத் திரு உருவ ஓவியம் கிரேத்துத் தீவில் வரையப்பட்டது என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் கருத்தா கும். இத் திரு உருவ ஓவியம் வரையப் பட்ட காலத்தில் கிரேத்துத் தீவு வெனிசு குடியரசின் கீழ் இருந்தது. எனவே எண்ணிறந்த திரு உருவ ஓவியங்கள் அங்கிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அவற்றில் சிறப்பு மிக்க இத் திரு உருவ ஓவியமும் ஒன்றாகும்.

இயேசு, மரியா, யோசேப்பு ஆகி யோரை உள்ளடக்கிய திருக் குடும்பம் நாசரேத்து ஊரில் வாழ்ந்த போது பயன் படுத்திய உணவு மேசையின் மீது நற் செய்தியாளராகிய புனித லூக்கா இயல்பு முறையில் வரைந்த திரு உருவ ஓவியத் தின் பிரதி தான் இத் திரு உருவ ஓவியம் என்ற வரலாறும் உண்டு.

சதாசகாய அன்னையின் நவநாள் பக்தி முயற்சி புதன்கிழமைகளில் நடைபெறுகின்றது

15ம் நூற்றாண்டில் ஓர் வர்த்தகரினால் சதா சகாய அன்னையின் திருஉருவ ஓவியம் கிரேத்து என்ற தீவிலிருந்து உரோமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பயணத்தின்போது பயங்கரப் புயலினால் பயணிகள் அவதிப்படுகையில், அன்னை யின் பரிந்துரையினால் அனைத்துப் பயணிகளும் காப்பாற்றப்பட்டதாக வர லாறு கூறுகின்றது.

அந்த வர்த்தகர் தனது இறப் பிற்கு சிறிது காலம் முன்பாக, அன்னை யின் திரு உருவ ஓவியத்தைத் தனது நண்பரிடம் கையளித்து நகரின் ஆலயத் தில் ஒப்படைக்குமாறு பணித்தார். நண் பரும் தான் மரணிக்கும் வரை திரு உருவ ஓவியத்தைத் தன்னுடன் வைத்துக் கொண்டார்.

மரியன்னை இவரது மகளின் கனவில் தோன்றி, தாம் புனித மேரி மேயர் பேராலயத்திற்கும் (St.Mary Major Basilica), புனித யோண் லத்தரன் (St. John Lateran) என்ற ஆலயத்திற்கும் இடையிலுள்ள (புனித மத்தேயு) ஆலயத் தில் வணங்கப்பட விரும்புவதாக அறிவித் தார்.

இறுதியில் இவரது மனைவி புனித மத்தேயு என்ற ஆலயத்தில் இத் திருஉருவ ஓவியத்தை ஒப்படைத்தார்.

தொடர்ந்து மூன்று நூற்றாண்டு களாக அவ்வாலயத்தில் சதா சகாய அன் னையின் பக்தி நடுநாயகமாக விளங்கிய போதும், நெப்போலியனின் படையெடுப் பால் புனித மத்தேயு ஆலயம் (தீயிடப் பட்டு) நிர்மூலமாக்கப்பட்டபோது, அற்புத மாய் காப்பாற்றப்பட்ட இத் திரு உருவ ஓவியம், உரோமையிலுள்ள புனித மேரி போஸ்ரியுலா என்ற ஆலயத்திற்கு மாற்றப்பட்டது.

இங்கு கிட்டத்தட்ட 70 வருடங்கள் வரை இத் திரு உருவ ஓவி யம் வைக்கப்பட்டிருந்தது. பின்னர், முன் னைய புனித மத்தேயு ஆலயம் இருந்த இடத்தில், புனித அல்போன்ஸ் லிகோரி யார் என்ற புதிய ஆலயம் உலக மீட்பர் சபையினரால் (Redemptorists) கட்டப்பட்ட போது, பலரது வேண்டுகோளினால் இத் திரு உருவ ஓவியம் அங்கு கொண்டு வரப்பட்டது.

1866ம் ஆண்டு அன்னையின் திரு உருவ ஓவியம், போலாந்து நாட்டு ஓவிய ரான லியோபோல் நேவோரொணி என்ப வரால் புனரமைக்கப்பட்டு, திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதரால் உலக மீட்பர் சபையிடம் (Redemptorists) ஒப்படைக்கப் பட்டது.

1866ம் ஆண்டு ஏப்ரல் 26ம் திகதி தொடக்கம் உரோமையிலுள்ள புனித அல்போன்ஸ் லிகோரியார் என்ற ஆலயத்தில் இத்த திரு உருவ ஓவியம் வணங்கப்பட்டு வருகின்றது. இன்று வரை இவ் ஆலயம் மரியன்னையின் முக்கியமான திருத்தலமாகச் சிறந்து விளங்குகின்றது.

சதா சகாய அன்னையின் (Icon திரு உருவ ஓவியம்)

முக்கிய செய்தி

eikon என்னும் கிரேக்க சொல்லிற்கு (icon / mage) திரு உருவ ஓவியம் என்பது பொருள்.

திரு உருவ ஓவியம் என்பது புனிதர் ஒருவரின் சாதாரண பிரதிபலிப் பல்ல, மாறாக ஆன்மீக ரீதியான பிரதி பலிப்பாகும்.

பார்வைக்கு இத் திரு உருவ ஓவியம் ஒரு பெண் தம் குழந்தையைக் கையில் ஏந்தியுள்ளார் என்று காட்டுவது போலத் தோன்றினாலும், அதன் ஒவ் வொரு அம்சத்தையும் அலசிப் பார்க்கும் போது அங்கே ஆழ்ந்த பொருள் அடங்கி யிருப்பதைக் காணலாம்.

கிறிஸ்தவ நம்பிக்கையுடை யோர் இத் திரு உருவ ஓவியத்தில் தம் சமய நம்பிக்கையின் அடித்தளங்களைக் காண்பர். இத் திரு உருவ ஓவியம் அவர் களுக்குத் தியானப் பொருளாகவும், இறை வேண்டல் பொருளாகவும், இறையறிவு பெறும் ஊற்றாகவும் உள்ளது.

இத் திரு உருவ ஓவியத்தின் மையப் பாத்திரங்கள் அன்னை மரி யாவும் அவர் தம் கைகளில் தாங்கியிருக்கும் குழந்தை இயேசுவும் ஆவர்.

அன்னை மரியா சிவப்பு நிற உடை அணிந் திருக்கின்றார். அது இயேசு வின் பாடுகளுக்கு அடை யாளம். மரியாவின் மேலாடை நீல நிறத்தில் உள்ளது அது மரியாவின் கன்னிமையின் அடை யாளம் மரியா அணிந்துள்ள தலைத்திரை அவர் தம் பணிவைக் குறிக்கின்றது.

இரு பக்கமும் ஒவ் வோர் வானதூதர் துன்பங்க ளுக்குக் காரணமான சின் னங்களைக் கைகளில் ஏந் திய வண்ணம் காணப்படு கின்றனர்.

இடதுபுறத்தில் மிக் கேல் அதிதூதர் உள்ளார். அவரது கைகளில் இயேசு வின் விலாவைக் குத்தித் திறந்த ஈட்டியும், இயேசு "தாகமாயிருக்கிறேன்" என்று கூறியபோது அவருக்கு அளிக் கப்பட்ட கசப்பான திராட்சை இரசம் தோய்த்த கடற்பஞ் சும் உள்ளன.

வலது புறத்தில் கபிரியேல் அதிதூதர் உள்ளார். அவர் கையில் மூன்று குறுக்கான சட்டங்களைக் கொண்ட சிலுவையும், இயேசுவை அச்சிலுவையில் அறையப் பயன்படுத்திய ஆணிகளும் உள்ளன.

குழந்தை இயேசு சற்றே திரும்பி, தாம் அறையப்பட்டு உயிர்துறக்கப் போகின்ற சிலுவையையும், ஆணிகளையும் பார்க் கின்றார். அவரது துன்பங்களின் முன்ன டையாளமாக வானதூதர்கள் ஏந்தி நிற்கும் கருவிகளைக் காணும் அவரை, அச்சம் ஆட்கொள்கின்றது. ஆறுதல் தேடித் தம் அன்னையின் கைகளை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றார். அச்ச உணர்வு மேலிட அவரது வலது காலிலிருந்த காலணி கழன்று கீழே தொங்குகின்றது. இயேசுவின் பாடுகளை நினைத்து அவர் தம் அன்னை மரியாவும் துயரத்தால் நிறைந்துள்ளது தெரிகின்றது.

அன்னை மரியாவின் நெற்றிப் பகுதி யில் ஒரு விண்மீன் உள்ளது. அது மாலுமிகளுக்கு வழிகாட்டும் விண்மீன் போல, மரியா மனிதர்கள் கடவுளிடம் செல்ல வழிகாட்டுகின்றார் என்பதைக் குறித்து நிற்கின்றது.

மரியாவின் நெற்றிப் பகுதியில் விண்மீனுக்கு அருகே உள்ள சிலு- வை அடையாளம் இந்தத் திரு உருவ ஓவியத்தை வரைந்த குழுவின் குறி யீடாக இருக்கலாம். வழக்கமாக பிசான் தியக் கலை மரியாவின் திரு உருவ ஓவியங்களில் மரியாவின் நெற்றிப் பகுதி யில் ஒரு விண்மீனும், தோள் பகுதியில் இரு விண்மீன்களும் வரையப்பட்டி ருக்கும்.

அன்னை மரியாவின் வலது கை இயேசுவைச் சுட்டிக்காட்டுகின்றது. இவ் வாறு வரையப்படுகின்ற மரியாவின் திரு உருவ ஓவியம் "Hodegetria" என அழைக்கப்படுகின்றது. அதற்கு (இயேசுவி டம் செல்ல) வழிகாட்டுபவர்" என்பது பொருள். அன்னை மரியா தம்மை வேண்டுவோரை இயேசுவிடம் இட்டுச் செல்லுகின்றார் என்றும், இயேசுவைச் சென்று சேருகின்ற வழி என்னவென் றும் காட்டுகின்றார் எனப் பொருள்படும். இயேசுவே வழியும், வாழ்வும் உண்மை யும் என மரியா சுட்டிக்காட்டுகின்றார்.

இத் திரு உருவ ஓவியத்தின் முக்கிய மூலப்பொருளானது, இத் திரு உருவ ஓவியத்தை வரைந்த ஓவியக் கலைஞர் (இன்னும் அடையாளம் காணப்படாத ஓவியர்) அதில் உள்ள அன்னை மரியா நம்மை நேரடியாகப் பார்ப்பதும், குழந்தை இயேசு தாம் எதிர்காலத்தில் அனுபவிக்கப் போகின்ற துன்பத்தை முன்னறிந்து அச்சம் கொள்வதும், அதனால் அவர் தம் காலிலிருந்து காலணி கழன்று தொங்குவதும், இதைத் தன் மனக் கண்முன் வைத்து உயிரோட்டமாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது ஆகும்.

மேலும் ஓவியர், இயேசுக் கிறிஸ்து, துன்பத்தின் மீதும் சாவின் மீதும் கொண்ட வெற்றிற்கு அடையாளமாய் வானதூதர் கள் பாடுகளின் சின்னங்களைத் தாங்கி யிருந்த போதும், இது அழிவின் பயங்கரக் காட்சியாகத் தோன்றாது. உயிர்ப்பில் கல்வாரியில் பெற்றுக்கொண்ட வெற்றியின் சின்னமாயும் விளங்கியுள்ளார். இவ் உண்மையை எடுத்துக் காட்டுவதற்காக ஓவியத்தின் பின்புறம் பொன் நிறமாக வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. எனவே இத் திரு உருவ ஓவியத்தின் மீதான தலைப்பு, கிறிஸ்துவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்னும் மறைபொருள் எனலாம்.

மரவுவழி கீழைத் திருச்சபை இத் திரு- உருவ ஓவியத்தை (இயேசுவிடம் செல்ல) வழிகாட்டுபவர் (Hodegetria) என்று வகைப் படுத்தப்படுகின்றது.

மேலும் அன்னையினதும், பிள்ளை யினதும் கைகளின் ஒன்றிணைப்பு, அன் னையின் இடக்கரம் மகனை அரவ ணைப்பது, கிறிஸ்துவின் மனிதத் தன் மையை உறுதிப்படுத்துகின்றது. பிள்ளை யின் செயற்பாட்டில், கால்களின் பாதம், தாயின் அரவணைப்பைத் தேடுவதாகவும் விளங்குகின்றது. கன்னிகை, கடவுளின் மகனைத் தாங்கியிருப்பது கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைச் சிறப்புற வெளிப் படுத்துகின்றது எனச் சித்தரிக்கப்பட் டுள்ளது.

அன்னை மரியா எம்மை மீட்பரிடம் கூட்டிச் சேர்ப்பார். வழி நடத்துவார், இது அன்னை மரியா வழியும், உண்மையும், வாழ்வும் என்னும் செய்தியாகும்.

இத் திரு உருவ ஓவியம் உரோமன் கத்தோலிக்க திருஅவையினரிடையே மிகவும் புகழ் பெற்று விளங்குவதற்குக் காரணம் இத் திரு உருவ ஓவியத்தைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்ட உலக மீட்பர் சபையினர் (Redemptorosts) உல கெங்கும் சதா சகாயமாதா பக்தியைப் பரப் பியது ஆகும். அப்பக்தி பரவிய இடங்களில் எல்லாம் இத் திரு உருவ ஓவியமும் கூடவே சென்றது.

இத் திரு உருவ ஓவியத்தின் முன் முழந்தாளிட்டு பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கரும், மரபு வழிக் கிறிஸ் தவர்களும் இறைவேண்டல் செலுத்தி வந்துள்ளனர்.

வழக்கம் போல இத் திரு உருவ ஓவியத்திலும் கிரேக்க எழுத்துக்களும், சொற் சுருக்கங்களும் உள்ளன. படத்தின் மேல்புறம், இடமும் வலமும் MP-OY (Mother of God) இறைவனின் தாய் என்னும் சொற்சுருக்கம் உள்ளது.

ஓவியத்தின் இடதுபுற வானதூ தரின் மேல் பகுதியில் OAM என்னும் எழுத்துக்கள் "மிக்கேல் அதிதூதர்" (Archangel Michael) என்பதையும், வலது புறம் OAT என்னும் எழுத்துக்கள் "கபி ரியேல் அதிதூதர்" (Archangel Gabriel) என்பதையும் குறிக்கின்றன.

குழந்தை இயேசுவின் தலை

தொகுப்பு :- அருட்பணி மேரி லூயிஸ் மொன்போட்

செல்வி றொஷானி அன்ரன் ராஜ்குமார்
O.L.R - யாழ்ப்பாணம்

சதா சகாய மாதா திருவிழா
ஆனி மாதம் 27ம் நாள்
கொண்டாடப்படுகிறது.

நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்கள் மறைபரப்பு தினம் 20 ஜப்பசி 2019

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பரிந்துரைத்துள்ள ஒக்ரோபர் மாதத்திற்கான நாற்கோண பரிணாம வடிவ செயற்பாடுகளின் முன்றாம் வாரத்திற்கான சிந்தனைகளை முன்னெடுக்கும் வகையில் இவ்வாக்கம் அமைந்துள்ளது. இவ்வாரத்தின் கருப்பொருளாக மறைபரப்புக்கான உருவாக்கம் பற்றிய சிந்தனை அமைந்துள்ளது.

எந்த ஒரு தொழிலையோ அல்லது பணியையோ இலக்காக் கொண்டு புறப்படும் பொழுது அதற்கென தம்மைப் பயிற்றுவிப்பதும் உருவாக்கம் பெறுதலும் அதன் வெற்றிக்கான முதலீடாகும். இயேசு தாம் தேர்ந்து கொண்ட சீடர்களை 3 வருட காலத்திற்கு தம் பள்ளியில் அமர்த்தினார். பாடுகள் வழியாகவே உயிர்ப்பு அனுபவத்துக்குள் பயணிக்க வேண்டிய தம் திருத்தூதர்களை மிக ஆழமானதும் காத்திரமானதுமான பயிற்சிப்பாசறையின் ஊடாக வழி நடத்தினார். திருத்தூதர்கள் சந்திக்க இருந்த வேதனைகளையும் சோதனைகளையும் மன உறுதியுடனும் பிரமாணிக்கத்துடனும் தளரா மனதுடனும் பணியாற்றத் தகுந்த உருவாக்கமும் அங்கீகாரமும் தேவையான அருள் வளங்களும் அவர்களுக்கு இன்றியமையாதவையாகும்.

பல துறைகளில் வல்லுனர்களைவிட தகுதி வாய்ந்த பணியாளர்கள்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழங்கிய 'திருப்பணிப் பயிற்சி என்னும் விதித்தொகுப்பு திருப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் திருப்பணிப்பயிற்சி பற்றிக் கூறுகிறது. பாடத்திட்டங்கள் மற்றும் பயிற்சி முறைகளைக் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைப்பதால் திருப்பணியாளர்கள் தம் அருள் வாழ்வில் உறுதியடையப் பயிற்சி பெறுவர். திருப்பணியாளர்களை பயிற்சி அகங்கள் பல துறைகளில் வல்லுனர்களாக உருவாக்குவதை விடத் தகுதி வாய்ந்த பணியாளர்களாக ஆளுமையில் உருவாக்குவதை முதன்மையான நோக்கமாகக் கொள்ள வேண்டும் எனக்கூறுகிறது. திருச்சங்கம் திரு அலையின் மறு மலர்ச்சியும் இறைமக்களின் முன்னேற்றமும் கிறீஸ்துவின் மனநிலை தோய்ந்த திருப்பணியிலேயே தங்கியுள்ளது என்பதை வலியுறுத்துகிறது.

மறைபரப்பாளர்கள் யார்?

' நற்செய்தியின் மகிழ்ச்சி என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். 'திருமுழுக்கினால் இறைமக்கள் அனைவரும் மறைபரப்பு சீடர்களாயுள்ளனர். (மத்தேயு 28:19) திருஅவையில் எந்த நிலையில் இருந்தாலும் நற்செய்தி அறிவிப்புப் பணியின் முகவர்களாகவுள்ளனர். புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் அனைத்துக் கிறிஸ்தவர்களும் இங்கே இப்போதே தீவிரமாக பங்கெடுக்க சவால் விடுக்கப்படுகின்றனர்.'

குருக்கள் இருபால் துறவியர் மறையாசிரியர் மற்றும் பொது நிலையினர் ஆகிய திருமுழுக்கினால் அழைக்கப்பட்ட அனைத்து கிறீஸ்தவர்களும் தத்தம் அழைப்புக்கும் கால இட சூழலுக்குமைய நற்செய்தித் தூதுவர்களாக அனுப்படுகின்றனர். எனவே எந்த நிலையில் இருப்பினும் நற்செய்திப் பணியாளர்களாகப் பிரமாணிக்கத்துடனும் தளரா மனதுடனும் பணியாற்றத் தகுந்த உருவாக்கமும் அங்கீகாரமும் தேவையான அருள் வளங்களும் அவர்களுக்கு இன்றியமையாதவையாகும்.

குருக்கள் - உருவாக்கம்

இயேசுக்கிறிஸ்துவின் முழுநேரப் பணியாளர்களாகத் தம்மை அர்ப்பணிக்க முன்வரும் திருப்பணியாளர்களின் களநிலை கருவில் இருந்து கல்லறை வரையிலான ஒரு தொடர் கதையாகும். அவர்கள் உதித்த குடும்ப - சமூகப் பின்புலத்தில் இருந்து ஆரம்பிக்கும் உருவாக்கப் பயணம் சிறிய, பெரிய குருமடங்கள் ஊடாக பயணித்து அவர்கள் சேவையாற்றும் பணிக் களங்களைச் சந்தித்து இறப்பு வரை ஒரு தொடர் கதையாக அமைகிறது.

முதல் உருவாக்கமும் தொடர் உருவாக்கமும் பணியாளரின் அறிவையும் ஆற்றல்களையும் மட்டுமல்ல அவர்களது ஆளுமையையும் ஊடருவி வளப்படுத்தி மெருகூட்ட வேண்டும். மறைப்பணி என்பது தன்னை உயர்த்தும் ஒரு தொழிலுமல்ல. வியாபாரமுமல்ல சுய விளம்பரமுமல்ல மாறாக இறைவனின் நிபந்தனை அற்ற அன்பை எல்லோருக்கும் எல்லாமாக வழங்கும் ஒரு உறவுப்பரிமாற்றமே.

திருத்தூதர் காலத்தில் இருந்தே திருப்பணியாளர்கள் உருவாக்கத்தில் திருஅவை குறிப்பாக திருத்தந்தையர்கள் ஆயர்கள் மிகவும் பொறுப்புடனும் கருத்துடனும் திருப்பணியாளர்களைப் பயிற்றுவித்து வருகிறார்கள் என்பது போற்றுதற்குரிய

யாழ் மறைமாவட்ட இயக்குநரின் செய்தி

இவ்வாண்டு மறைபரப்பு தினம் சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் இவ் ஒக்டோபர் 2019 யை நற்செய்தி அறிவிப்பின் சிறப்பின் மாதமாக அறிவித்துள்ளமையே அதன் காரணமாகும்.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற் செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற். 16:15) **"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு"** (1 கொரி 9:16) எனத் திருவிவிலியம் நற்செய்தி அறிவிப்பின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. திருமுழுக்கு வழியாக கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்ட நாம் எந்தப் பணி செய்தாலும் நற்செய்தி அறிவித்து, அதன்படி வாழ்வது தான் மறைபரப்புப் பணியாகும். இங்கு நற்செய்தி என்பது இறை இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்வாக்குவதாகும். திருஅவை இருப்பதும் இயங்குவதும் நற்செய்தியை அறிவிப்பதற்காகவே.

குறிப்பாக இறையாட்சியை ஒவ்வொருவரிடமும் மலரச் செய்வதும், அவர்களை திருஅவையில் சீடராக்குவதுமே இவ் மறைபரப்பு நாள் எமக்கு விடுக்கும் செய்தியாகும்.

நற்செய்தியின் சிறப்பு மாதம் பற்றி **"பாதுகாவலன்"** பத்திரிகை வாயிலாக பல இறையியல் சிந்தனைகளைப் பெற்றுள்ளோம். நாம் ஒவ்வொருவரும் உறங்குநிலை விசுவாசத்தில் (Dormant Faith) உள்ளோரை செயல் நிலை விசுவாசிகளாக (Active Faith) மாற்றும் மறை பணியாளர்களாக திருஅவையில் உழைக்க வேண்டும். இவ் அழைப்பினை உணரவைக்க எம் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் மறைபரப்பு தின திருப்பலியில் பேராலயத்தில் அடையாள முறையில் திருவிவிலியம் வழங்கி பொதுநிலையினர். திருநிலையினருக்கு இவ் அழைப்பின் மாண்பையும், பொறுப்பையும் உணர்த்துவார்.

இலங்கை மண்ணில் இறை விசுவாசத்தை வித்திட்ட எம் தேசத்தின் புனிதர் யோசவ்வாஸ் எம்மையும் மறைபரப்புப் பணியில் இணைப்பாராக.

அருட்பணி எஸ்.ஏ.றொஷான்
இயக்குநர்
திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்

முதிர்ச்சியும் பெறுவதற்கான வழிகளை சமைத்துக் கொடுப்பதில் திருஅவை கடுமையாக உழைத்து வருகிறது. கத்தோலிக்க திருஅவையின் தலைமைப் பீடமான �உரோமாபுரியிலும் மற்றும் கத்தோலிக்க நகர்களிலும் கத்தோலிக்க பல்கலைக்கழகங்களையும் தொடர் உருவாக்கத்திற்கான பயிற்சி அகங்களையும் தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக அமைத்து மறைபரப்பாளர்களின் தரம் மிக்க உருவாக்கத்தை வழங்க உழைத்து வருகிறது.

இருபால் துறவற சபையினர் உருவாக்கம்

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் ..." இதோ உலக முழுவு வரை ஏந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று கூறிய இயேசுவின் கட்டளையை மனதில் இருத்தி மறை அறிவிப்புப் பணியைத் தமது விருதுவாக்காகக் கொண்டு புறப்பட்ட பல இருபால் துறவற சபையினர் திரு அலவின் முன்னனணியினராகத் திகழ்ந்தனர். குறிப்பாக ஜரோப்பிய நாடுகளில் இருந்து நிகரற்ற அர்ப்பண உணர்வுடன் புறப்பட்ட துறவறத்தினர் நற்செய்தி அறிவிக்கப்படாத மண்ணில் கால் பதித்து விசுவாச வித்தை விதைத்தனர். இவர்களது உருவாக்கம் மிகவே துல்லியமானது.

நற்செய்தி அறிவுரைகளைத் தமது வாழ்வின் நெறியாக்கி எண்திசைக்கும் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட மண்ணையோ மக்களையோ மறைமாவட்டத்தையோ சார்ந்து வரையறுக்கப்படாமல் இன மத மொழி நிறப் பண்பாடுகளையும் கடந்த நிலையில் நற்செய்தித் தூதுவர்களாகப் பணியாற்ற உருவாக்கம் பெறுகின்றனர். இவர்களது அழைப்பை உணர்ந்த காலம் தொடக்கம் இறப்பு வரை பல இனமொழி நிற வரையறைகளைக் கடந்த நிலையில் குழுமங்களை அமைத்து வாழவும் பணியாற்றவும் உருவாக்கம் பெறுகின்றனர். இவர்களது கூட்டு வாழ்வும் பரஸ்பர உரையாடல்களும் பரந்த பணியும் இறையாட்சியின் சகோதரத்துவ வாழ்விற்கு சாட்சியாகிறது. பிற மதத்தினருடன் உரையாடவும் அவர்களை மதித்துத் தோழமை கொள்ளவும் நற்செய்தியின் விழுமியங்களைப் பறைசாற்றுவதில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் இவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

துறவியர் திருஅவையில் இறைவாக்குரைக்கும் பணியை முன்னெடுத்துச் செல்லவும் உண்மை நீதி ஒப்புரவு சமாதானம் போன்ற விழுமியங்களை பீளவுபட்ட சமூகங்களிலே விதைக்கும் வித்தகர்களாகவும் இறைவாக்கினர்கள் கொடுக்கும் விலையை தியாக சிந்தையோடு கொடுக்கக்கூடிய மன உறுதி பெற்றவர்களாகவும் உருவாக்கம் பெறுகின்றனர். திரு அவையின் புதுப்பித்தல் புத்துயிர் அளித்தல் என்ற முன்னெடுப்புக்களுக்கு முன்நின்று உழைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இவர்கள் இறை அருளும் உருவாக்கமும் பெறுகிறார்கள்.

பொதுநிலையினர் உருவாக்கம்

யினரின் திருத்தூதுப்பணி மனித வாழ்வில் அனைத்து நிலைகளையும் ஊடருவ வேண்டும். பொதுநிலையினர் உலகியல் அமைப்பை நற் செய்தி மனப்பாங்கில் ஊடருவி நிறைவு செய்யவேண்டும் எனப் பணிக்கிறது. பொதுநிலையினர் தம் திருத்தூதுப் பணியை திறம்பட ஆற்றுவதற்கு அவர்களுக்குப் பணிப் பயிற்சி அளிப்பது திரு அவையின் கடமையாகும். மனிதநேயம் சமுதாய மற்றும் பண்பாடு. இறைநம்பிக்கை, அருள் வாழ்வு. இறையியல், ஒழுக்கவியல், களப்பயிற்சி, ஒன்றுபட்டு ஒத்துழைத்து உரையாடுவது போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். கருத்தரங்குகள் மாநாடுகள், ஆன்மீக மறையுரைகள், தியானங்கள், கூட்டங்கள், பேருரைகள், நூல்கள் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி பொது நிலையினரின் உருவாக்கத்திற்குத் திருஅவை வழி வகுத்துக் கொடுக்க வேண்டும். இங்கு திருஅவை குருக்கள் துறவியர் மட்டில் காட்டும் அக்கறையையும் அவர்களது உருவாக்கத்திற்கான செயற்பாடுகளையும் பொதுநிலையினர் மட்டிலும் கணிசமான அளவு வழங்குவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

அனைத்திற்கும் மேலாக திருநிலையினரும் பொதுநிலையினரும் அணிதிரண்டு பொது நோக்குடனும் சகோதர உணர்வுடனும் இறை அரசை முன்னெடுக்கத் தம்வாழ்வில் தொடர்ச்சியான மன மாற்றங்கள் ஒப்புரவு முயற்சிகள் ஊடாகக் கைகோர்த்து வழிநடக்க முயற்சிகளை மேற்கொள்ளுவதும் இறை அருளைத் தினமும் வேண்டி நிற்பதும் மறை அறிவிப்புக்கான தொடர் உருவாக்கமாக விளங்கவேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பரிந்துரைத்துள்ள ஒக்ரோபர் மாதத்திற்கான நாற்கோண பரிணாம வடிவ செயற்பாடுகளின் நான்காம் வாரத்திற்கான சிந்தனைகளை முன்னெடுக்கும் வகையில் இவ்வாக்கம் அமைந்துள்ளது. இவ்வாரத்தின் கருப்பொருளாக 'மறைபரப்புக்கான பிறர் அன்புப்பணி' பற்றிய சிந்தனை அமைந்துள்ளது.

திருஅவையின் ஆரம்ப காலகட்டத்திலேயே யூக எல்லைகளைக் கடந்த மறைபரப்பு

திருஅவையின் ஆரம்ப கால கட்டத்திலேயே யூத எல்லைகளைக் கடந்து மத்தியதரைக்கடல் சார்ந்த நாடுகளில் வாழ்ந்த புறஇனத்தார் மத்தியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இதில் நற்செய்தித் தூதுப் பணியின் நிகரற்ற முன்னோடியாகதத் திகழும் புனித பவுல் யூத சமயச் சட்டங்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் போன்ற கலாசார எல்லைகளைக் கடந்து நற்செய்தி அறிவித்தார். நற்செய்தியின் கருவூலமானது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்கோ மண்ணிற்கோ மட்டும் சொந்தமானதல்ல. இயேசுவினுடைய காலத்திலேயே 'மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது' (மத்தேயு 4:17) என பறைசாற்றத் தொடங்கிய இயேசுவின் மனநிலையும் பழமான கழிந்து புதிய புதுகல் என்னும் தூரப்பார்வையின் நோக்கு மிளிர்ந்தது கண்கூடு.

அவர் முழக்கமிட்டு அறிவித்த அருள் தரும் ஆண்டில் "ஏழையருக்கு நற்செய்தி அறிவிக்க, சிறைப்பட்டோர் விடுதலை அடைய, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற" (லூக்கா 4:18) என்னும் விடுதலைச் செய்தியை முழுக்கமிட்டு அறிவித்தார். இவ்வாறு இயேசுவின் போதனை விடுதலை வழங்கும் நற்செய்தியாகவே திகழ்ந்தது. இன்னும் சிறப்பான முறையில் லூக்கா நற்செய்தியாளரின் பார்வையிலும் இயேசு அறிவித்த இறையரசு யூத எல்லைகளை ஏற்கனவே கடந்து சென்று விட்டது. அந்நியர்கள் புற இனத்தார் என்று இகழ்ந்து ஒதுக்கப்பட்ட மக்கள் இயேசுவை தம் மீட்பராக இனம் கண்டு கொண்டார்கள். அந்நியர் மனதில் புதைந்திருந்த தேடலையும், இயேசுவின் வல்லமையில் இனம் கண்ட இறை நம்பிக்கையையும் , அவர்கள் காட்டிய நன்றி உணர்வையும் இயேசு பல சந்தர்ப்பங்களில் வியந்து பாராட்டினார். இத்தகைய இயேசுவின் மனநிலைமறைபரப்பாளர்களாகிய எம்மவர்க்கு முன்னுதாரணமாக விளங்குகிறது.

கல்லறையைக் கடந்து உயிர்த்த ஆண்டவராகத் திகழும் இயேசு ஏற்கனவே மறைகளையும் பண்பாடுகளையும் ஊடருவி மீட்பளிக்கும் கடவுளாகத் திகழ்கிறார். றேமன் பனிக்கார் என்னும் இறையியலாளர் "மானிடத்தின் மனங்களுக்குள் மறைந்திருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிக் கொணர்வதே நற்செய்தித் தூதுப்பணி" என்கிறார்.எனவே இறையாட்சி நிறுவனமாக்கப்பட்ட கிறிஸ்தவ மறையிலும் பெரி யது. திருஅவையானது தொடர்ந்தும் இயங்குவது மறைப்பணிக்கே.

ஈராலாற்றோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மறைத்தூதுப்பணி

தனர். அங்குள்ள மக்களைச் சிறைப்பிடிப்பதிலும் அவர்கள் வழங்களைச் சூறையாடுவதிலும் வீரத்தோடு முனைப்பாகச் செயற்பட்டனர். இவ் ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் சுதேச மக்கள் தமக்கெனச் சொந்தமாகக் கொண்டிருந்த பாரம்பரியங்களையும் இறை நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் சிதறடித்தன. இன்றையகால கட்டத்தில் வாழும் ஆசிய ஆபிரிக்க தென் அமெரிக்க நாட்டு மக்கள் ஜரோப்பிய காலணித்துவ ஆட்சியாளர்களை குறை கூறுகின்றனர். ஜரோப்பியர்கள் இவ்வாறு ஆக்கிரமிப்பாளர்கள் காலாகாலமாக தம் சொந்த மண்களில் குடியிருந்த மக்களை மனம் நோகப்படுத்தினார்கள். அக்காலத்தில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் தம் திருத்தூதுப் பணியை ஆர்வத்தோடு நிறைவேற்ற இவ்வாட்சியாளர்களோடேயே பயணித்தார்கள். அதனால் ஆக்கிரமிப்பாளர்களையும் மறைத்தூதுப் பணியாளர்களையும் வேறுபடுத்திப்பார்க்க சுதேச மக்களால் முடியவில்லை. அவர்களின் மறை பரப்புப்பணி ஒரு ஆக்கிரமிப்பு செயற்பாடாகவும் தம் சொந்த மண்ணிலேயே மக்கள் வாழ்வை அந்நியமயமாக்குவதாகவும் அமைந்தது.

இவ்வனுபவம் மறைத்தூதுப்பணியின் ஒரு பின்னடைவாகும். பிற மதத்தவர்கள் மனங்களில் கசப்பான அனுபவங்களையும் வீண் சந்தேகங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் பிறப்பித்து விட்டன. இதனால் இன்றைய காலச்சூழலில் மறைபரப்பு பணிக்கு இவ்வரலாற்று நிகழ்வு பெரும் தடையாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவின் போதனைகளும் நற்செய்தியின் விழுமியங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன

உண்மையில் மறைபரப்பாளர்களின் நோக்கம் தூயதாக இருந்தது என்பதில் எந்த ஐயமுமில்லை. இருந்த போதிலும் கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் கல்வி பணி பொருளாதார வைத்திய சேவை போன்ற துறைகளில் பணியாற்றுவதனூடாக மனித வாழ்வை மிகவே மேம்படுத்தியுள்ளனர். தொழில் நுட்பம் சார்ந்த வளர்ச்சிக்கும் மனிதநேய முயற்சிகளுக்கும் கிறிஸ்தவ மதம் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

உலகளாவிய மானிட வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் கிறிஸ்துவின் போதனைகளும் நற்செய்தியின் விழுமியங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியது. பூகோள மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் கிறிஸ்தவ மறையின் பங்களிப்பு காத்திரமானது எனபதில் எந்தவித ஐயமுமில்லை.

இருப்பினும் ஆசிய நாடுகளைப் பொறுத்தளவில் இந்துக்களும் பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் செறிந்து வாழுகின்ற சூழலில் 200ஆயிரம் ஆண்டுகளின் பின்பும் கிறிஸ்தவம் இன்னும் சிறுபான்மை சமூகமாகவே இருக்கிறது. இதற்கு அப்படைக் காரணம் என்ன? இந்திய மண்ணின் விடுதலைக்கு உழைத்த மாமனிதர்களில் மகாத்மா காந்தி தனிப் பெரும் இடத்தை பெறுகிறார். கிறிஸ்துவின் நற்செய்திப் போதனைகளால் குறிப்பாக புரட்சிகரமான மலைப்பொழிவினால் கவரப்பட்ட காந்தி மகான் 'கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கிறிஸ்தவர்களை வெறுக்கிறேன்' என்று கூறியுள்ளார். ஏனெனில் கிறிஸ்தவர்களாக விளங்கிய ஜரோப்பிய மக்கள் இந்திய மண்ணை ஆக்கிரமித்து மக்களை அடிமைப்படுத்தினார்கள்.

இங்கு குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால் கிறிஸ்துவின் நற்செய்தி அழகானது. புனிதமானது. விடுதலையளிப்பது. ஆனால் மறைத்தூது அறிவிப்பவர்களாகிய கிறிஸ்தவர்களின் மனநிலையிலும் அணுகுமுறையிலும் நடத்தையிலும் மனமாற்றமும் முன்னேற்றமும் காணவேண்டியது என்பது அவசியமாகிறது.

இருப்பினும் கடந்த வரலாற்றில் மறைபரப்பாளர்களின் ஆர்வத்தை யும் அர்ப்பணிப்புக்களையும் முயற்சிகளையும் எந்த வகையிலும் குறைத்துக் கூறுவதற்கோ குறைகூறுவதற்கோ இல்லை.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எதிர்பார்ப்பில் மறை அறிவிப்புப்பணி

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் நற்செய்தியின் மகிழ்ச்சி என்னும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் கடவுள் நமக்கு வழங்கும் மீட்பு அவரின் ஒரு இரக்க செயலாகும் என்று கூறுகிறார். இவ்வாண்டின் ஒக்ரோபர் மாதத்தினை மறை பரப்பிற்கான சிறப்பு மாதமாக அனுசரிக்க அழைக்கும் திருத்தந்தை மறைபரப்புக்கான பிறர் அன்புப்பணியில் சிறப்பான முறையில் ஈடுபட வலியுறுத்துகிறார்.

இறைவனுடைய இரக்கத்தைத் தேவையோடு இருப்பவர்களோடு தூய மனதோடு பகிர்ந்து கொள்வதே மறைபரப்புக்கான ஒரே ஒரு வழி என்பதை வலியுறுத்துகிறார். குறிப்பாக இன மத மொழி நிற அடிப்படையில் மனிதர்களை அந்நியராக்கும் மனநிலையில் இருந்து மனமாற்றம் பெற்று யாவரையும் சகோதர சகோதரிகளாக ஏற்று வாழவும் அறிவுரை கூறுகிறார். வளர்முக நாடுகளை நோக்கிப் பாதுகாப்புக் கரூதிப் படையெடுக்கும் மக்களை அந்நியர்களாக அல்ல மாறாக அன்பர்களாக ஆதரிக்க அழைக்கிறார்.

இவ்வாண்டு ஒக்ரோபர் மாத மறைபரப்புக்கான சிறப்புக் காலத்தை மறைபரப்பு முன்னெடுப்புக்களால் எங்களைச் செயற்படுத்துவோம் என்பதை கிறிஸ்தவர்களாகிய யாம் சிந்தித்து அணி திரளுவோம். பின்வரும் முன்னெடுப்புக்களைத் திருத்தந்தையின் எதிர்பார்ப்பிற்கு அமைய முன்மொழிய விரும்புகிறேன்.

1. வீண் ஆடம்பர மேலோட்டமான பக்தி முயற்சிகளிலும் மூடக் கொள்கைகளிலும் உலகியல் போக்குகளிலும் இருந்து மனம்மாறி கிறிஸ்து மையினின்

அடையாளம் - Logo

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சிறப்பு நற்செய்தி அறிவிப்பு மாதத்தினைக் கொண்டாட ஓர் அடையாளத்தை (logo) வெளியிட்டுள்ளார்கள். இந்த அடையாளம் உலக உருண்டைபோல உருண்டையாக வும், அந்த உருண்டையை ஆரத்தழுவி அரவணைக்கக்கூடிய வடிவில் சிலுவையும், அந்த சிலுவை 5 வர்ணங்களைக் கொண்டதாகவும் அமைந்திருக்கின்றது. அதில் இணைந்திருப்பதுபோல baptized and sent (திருமுழுக்கு பெற்றோரும் அனுப்பப்பட்டோரும்) என்ற வாக்கியம் பொருத்தப்பட்டுள்ளது.

திருத்தந்தை கொடுத்துள்ள அடையாளத்தை நாம் இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதும் இயேசுவின் மீட்பளிக்கும் சிலுவையினால் தீமைகளிலிருந்து விடுதலைபெற்று, அமைதியை, மகிழ்ச்சியை அடையும். எல்லைகளைத் தாண்டி நற்செய்திப் பணிக்கு நம்மை நாம் அர்ப்பணிக்கவும் வேண்டும். மறைத்தூதுப் பணிக்கு எல்லை என்பதே கிடையாது. சிலுவையில் உள்ள ஐந்து வர்ணங்களும் உலகத்தில் இருக்கின்ற ஐந்து கண்டங்களைக் குறிக்கின்றன.

சிவப்பு நிறம் - அமெரிக்காக் கண்டம் **"இரத்தம்"**
மறை சாட்சியர்களின் வாழ்க்கையைக் குறிக்கின்றது.

வெண்மை நிறம் - ஐரோப்பாக் கண்டம் **"மகிழ்ச்சி"**
நிறையப் புனிதர்கள். அவர்கள் வழியாக திரு அவையில் புது வாழ்வு

மஞ்சள் நிறம் - ஆசியாக் கண்டம் **"கிறிஸ்துவின் ஒளி"**
கிறிஸ்தவத்தின் தொடக்கம். இயேசு ஒளியாய் இருக்கின்றார். கிறிஸ்துவின் ஒளி உதித்துள்ளது.

பச்சை நிறம் - ஆபிரிக்காக் கண்டம் **"பசுமை"**
உயிர்த்துடிப்பான மக்கள். வளர்ச்சியை எதிர்நோக்கி இருப்பவர்கள்.

நீல நிறம் - பசுபிக் கடலிலுள்ள தீவுகள் - **"தண்ணீர்"**
திருமுழுக்கை நினைவூட்டி இயேசு என்றும் நம்மோடு இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

மொழி பேசுபவர்களையும் தாய அன்பால் அரவணைப்போம்.

3. ஏனைய மதங்களையும் நம் மண்ணில் முன்னோர் வளர்த்த பாரம்பரியங்களையும் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் அந்நியப்படுத்தாது அவற்றை மதித்து பேணிப் பாதுகாப்போம்.

4. கிறிஸ்துவின் நற்செய்தி மீடபின் நற்செய்தி என்ற நம்பிக்கையோடு நாம் புறப்பட்டாலும் அந்நற்செய்தியை திறந்த மனநிலையோடும் தாழ்ச்சி உள்ளத் தோடும் யாம் பெற்ற இறை இரக்கத்தை, கிடைக்கும் சந்தர்ப்பங்களை எல்லாம் பயன்படுத்திப் பகிர்ந்து கொள்வோமாம்.

5. நற்செயதியை அறிவிக்கும் மறைபரப்பாளர்கள் இறையாட்சி மலர உறைப்பவர்களே. உரையாடல் இன்றி உறவை வளர்க்க முடியாது. இறை மனித உறவை வளர்க்கும் ஒரேயொரு யுக்தியாக உரையாடலுக்கு எந்த வேளையிலும் 'ஆம்' எனப் பதிலிறுப்போம்.

6. நமது கடந்த கால மறைபரப்பு அணுகுமுறைகளில் புரிந்து கொண்ட தவறுகளை ஏற்றுக் கொண்டு திருந்திய மனதோடு உறவுகளை புதிப்பித்துக்கொள்வோம்

7. பிற மறைகளுடனான உரையாடல் புத்தி ஜீவிகள் மட்டில் இடம்பெறும் அதே வேளையில் கிராமங்கள் சிற்றூர்கள் போன்ற சமூகத்தின் அடிமட்ட நிலைகளிலும் வாழ்வின் முன்னேற்றம் பரஸ்பர உறவு போன்ற உயரிய நோக்கோடு முன்னெடுப்போம்

8. போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் இடப்பெயர்வுகளைச் சந்தித்து துன்புறும் மக்களை அந்நியர்களாகக் கருதாமல் அவர்களை அன்புடன் அரவணைத்து அச்சந்தாப்பங்களை இறை இரக்கத்தை அனு பவித்துப் பகிரும் அரிய இறை அழைப்புகளாகக் கருதிப் பயன்படுத்துவோம்.

9. மதம் என்ற பெயரில் ஏற்படும் போட்டி பூசல்களையும். சண்டை சச்சரவுகளையும். கலவரங்களையும் தவிர்த்து அனைத்து மதங்களும் போதிக்கும் கருணை சகிப்புத்தன்மை பிறர் அன்பு போன்ற விழுமியங்களைக் கடைப் பிடிப்பதில் ஒன்றுபடுவோம்.

10. இவ்வாண்டின் மறைபரப்புக்கான சிறப்பு மாதத்தின் மறைபரப்பு பணியின் உச்சக் கட்டமாக இறைவனின் விசேட அன்பிற்கு உரியவர்களாக சமூகங்களில் ஒடுக்கப்படும் ஏழையர் மீது பரிவு கொண்டு தனித்தும் திரு அவை சமூகங்களாகவும் இறையாட்சி அவர்கள் மத்தியில் மலர உழைப்போம்

காவலன் கலசம்

வழிபாடு வாழ்வாகுமா!! 05

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

பீடத்தைக் குரு முத்தமிடுதல்

""கிறிஸ்து தம் திரு உடலை ஒப்புக் கொடுத்து சிலுவையின் மெய்யான பலியில் முற்காலப் பலிகள் நிறைவு பெறச் செய்தருளினார். எங்கள் மீட்புக்காக அவர் உம்மிடம் தம்மையே கையளித்தபோது அவரே குருவாகவும் பலிப்பீடமாகவும் செம்மறியாகவும் விளங்கினார். (பாஸ்காவின் தொடக்கவுரை ஏ). ஆகவே, இது கிறிஸ்துவையும் அவர் மீது கொண்டாடப்படும் தியாகத்தையும் குறிக்கிறது. இந்த அடையாளங்கள் எமக்குப் பலவற்றைத் தொடர்புபடுத்துகின்றது. அதனால்தான் நாம் பீடத்திற்கு ஆழ்ந்த மரியாதை செலுத்துகிறோம், அதை தூபம் செய்கிறோம், அதை சரியான துணிகளால் அலங்கரிக்கிறோம், அதன் மீது ஒளியேற்றுகின்றோம்.

திருப்பலியில் திருப்பீடத்தைச் சுற்றி அல்லது திருப்பீடத்தை நோக்கி இறை மக்கள் பலி செலுத்தும் குருவோடு இணைந்து இறைவனுக்கு நன்றியையும், ஆராதனையையும் செலுத்துவார்கள். ஏனெனில், இயேசு இறுதி இரவு உணவிற்காகத் தமது சீடர்களை அழைக்கின்றார். இயேசுவின் இந்த இறுதி உணவு ஒரு மேசையைச் சுற்றி கூட்டப்படுகின்றது. அவரிடம் வந்து அவரை சுவைக்க வேண்டும் என்பது இயேசுவின் அழைப்பாகின்றது. ஆகவே, முதலாவதாக இறைவனின் திருவிருந்தை உட்கொள்ள கொடுக்கப்படும் அழைப்பாக இது அமைகின்றது. இரண்டாவது இயேசு எப்போதும் பாவிகளை வரவேற்றார்: அது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடவுளின் பணியைக் குறிக்கிறது. பாவிகளோடு இருப்பதைப் பற்றி பல விமர்சனங்கள் இருந்தபோதிலும், இயேசு அதை முக்கிய பணியாகக் கண்டார் பாவிகள் தங்களை வெளிப்படுத்த அனுமதித்தார். திருப்பலியிலும் இதே சிந்தனை பொருத்தமானது. திருஅவை நம்மை அழைக்கும்போது, கிறிஸ்துவே நம்மை அழைக்கிறார் என்பதனால் இந்த அழைப்பிற்குத் தகுதியாக எமது பாவ நிலையை உணர்ந்து கொள்ளவேண்டும்.

பீடத்தை முத்தமிடுகின்ற ஒவ்வொரு குருவும் தனக்கு ஒரு உன்னத, பொறுப்புள்ள அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர வேண்டும். கிறிஸ்துவையே உணவாக பானமாக கொடுக்கும் குரு திருப்பலியில் கிறிஸ்துவாகின்றார் இதை "Christus totus" என்று அழைக்கின்றோம் (Mystici Corporis (July 29, 1943) by Pope Pius XII). இதனால் இவர் தூயவராகின்றார், கபடற்றவராகின்றார், மாசற்றவராகின்றார். 'இத்தகைய தலைமைக் குருவே நமக்கு ஏற்றவராகிறார். இவர் தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, வானங்களுக்குமேலாகஉயர்த்தப்பட்டவர்', (எபி: 7:26).

பாஸ்கா மறைபொருளைத் தாங்கும் பீடம்

ஆலயத்தின் பிரதான பலிப்பீடம் திருஅவையின் வழிபாட்டு வாழ்வின் மையமாக உள்ளது, ஏனென்றால் அது கிறிஸ்துவின் அடையாளம். "எல்லாவற்றிற்கும் மேலாக, பிரதான பலிப்பீடம் எப்போதும் கிறிஸ்துவின் அடையாளமாகவும், தூய மறைபொருள் நிறைவேற்றப்படும் இடமாகவும், இறைமக்கள் ஒன்றாகக் கூடிவருவதால் அது ஒரு மைய மாகவும் இருக்கின்றது" (Sacred Congregation of Rites: Eucharisticum Mysterium, no.24). பலிப்பீடம் உண்மையிலேயே புனிதமானது. இது கிறிஸ்துவின் சின்னம் அவரேநற்கருணையாதலால்கிறிஸ்துவே உண்மையான பலிப்பீடமாகும். புனித ஜோன் கிறிஸ்தோஸ்தம் எழுதியது போல, "இந்த பலிப்பீடம் ஒரு கல், ஆனால் அது கிறிஸ்துவின் திரு உடலை பெறும்போது அது தூய்மையாகின்றது". பலிப்பீடம் ஒரு வழிபாட்டின் உயர்ந்த இடத்திலேயே இருக்க வேண்டும். மக்கள் பலிப்பீடத்தைப் பார்க்க வேண்டும் அதிலே இடம்பெருகின்ற 'உட் பொருள் நிலை மாற்றத்தை' (Transubstantiation) அவர்கள் பார்த்து உணர வேண்டும். பலிப்பீடத்தின் புனிதத் தன்மை அறியாமல் பலர் பலவகையான செயற்பாடுகளை அதன் மேலே செய்கின்றோம் அதிகமான பூக்களை வைத்துப் பீடத்தை மறைக்கின்றோம் (உ.தி.நூ.பொ.ப: 304-307), சில நேரங்களில் அதிலே ஏறி நின்று மின்குமிழ்களை மாற்றுகின்றோம். இவ்வாறு எமது தூய பலியின் அர்த்தம் மாற்றப்பட்டு இன்று அவைகள் சடங்காக மாறிக் கொண்டிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகின்றது. இதற்காகவே வீடுகளிலும், வீதிகளிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது, பல விடயங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று நான் ஏற்கனவே கூறியிருந்தேன். பீட அலங்காரம் செய்யும் போதும் கூட மிகக் கவனமாகவும் நேர்த்தியாகவும் அவற்றைச் செய்ய வேண்டும்.

பீட அமைப்பு

முதல் கிறிஸ்தவ பலிப்பீடங்கள் சிறிய, சதுர மற்றும் மரத்தாலானவை. கடைசி இராவுணவு கூட மிக முக்கியமாக இருந்தது. எருசலேமின் புனித சிரில் எழுதும் போது, "உயிர் எப்போதும் மரத்திலிருந்தே வருகிறது. "உனக்காகக் கோபர் மரத்தால் ஒரு பேழை செய்", (தொநூ 6:14) என்று நோவாவின் காலத்தில் உயிரைப் பாதுகாத்தது மரத்தாலான ஒரு பேழையே. மோயீசன் கோலை உயர்த்திப் பிடிக்கும் போது, அக்கோலைத் தாங்கியவருக்கு முன்னால் கடல் இரண்டாகப் பிளந்தது. 'கோலை உயர்த்திப் பிடித்தவாறு உன் கையைக் கடல்மேல் நீட்டி அதனைப் பிரித்துவிடு. இஸ்ரயேல்மக்கள்கடல்நடுவே உலர்ந்த தரையில் நடந்து செல்வார்கள்' (விப 14:16). மோசேயின் கோல் இவ்வளவு வலிமையாகவும், கிறிஸ்துவின் சிலுவை சக்தியற்றதாகவும் இருக்க முடியுமா?"

ஆகவே ஆரம்பகாலத் திருச்சபை மரப் பலிபீடங்களின் கருத்தை எளிதில் ஏற்றுக்கொண்டது. இது பதினொராம் நூற்றாண்டு வரை நீடித்தது. இவ்வாறு கிறிஸ்தவ பலிப்பீடங்களும் வெண்கலம், வெள்ளி, தங்கம், தந்தம் மற்றும் கல் ஆகியவற்றால் செய்யப்பட்டன. திருச்சபை தனது வழிபாட்டை வளர்த்துக் கொண்ட போது, கல் பலிப்பீடங்களுக்கான பிரதான பொருளாக மாறியது. இதனது சான்றாக 1596ம் ஆண்டு திருச்சபை கற்களால் ஆன பலிப்பீடத்தைப் பயன்படுத்த அனுமதியளித்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அவை "வெட்டப்பட்ட கற்களாக" இருக்கக்கூடாது என்றும் கருத்தில் கொள்ளப்பட்டது. காரணம், 'எனக்காகக் கற்பீடம் அமைத்தால், செதுக்கிய கற்கள்கொண்டுகட்டவேண் டாம். ஏனெனில், உனது உளி அதன்மேல் பட்டால், நீ அதனைத் தீட்டுப்படுத்து வாய்' (விப 20:25) என்றும் பொருள் கொள்ளப்பட்டது. *(தொடரும்..)*

---

200 ஆம் ஆண்டைநோக்கி பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

அருட்சகோதரி லுமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

விழிப்பு நிலைகள்...

இவ்விதமாகத் தனது குருத்துவ அழைத்தல் வாழ்வில் விழிப்புள்ளவராக, முதலில் போர்டோவிலுள்ள நோற்றம் என்ற இடத்துக்கு உதவிக் குருவாக இருந்து பங்குத்தந்தைக்கு துணைபுரிந்தார். பன்னிரண்டு நாட்களில் அங்கிருந்து யூலாலிப் பங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்குள்ள ஏழைகளுக்குத் தன்னிடமுள்ளதைப் பகிர்ந்து வாழ்வு கொடுத்து வந்தார். வயோதிபர் மட்டில் மிகவும் அக்கறை காட்டி உதவி செய்தார்.

புனித யூலாலிப் பங்கு போர்டோ நகரின் எல்லைப் புறமாக இருந்ததால், ஆலயம் அக்கிராம மக்களுக்கு வெகு தொலைவாக இருந்தது. இதனால் அக்கிராம மக்கள் ஆன்மீகக் காரியங்களில் அக்கறையின்றி இறைவனைவிட்டு விலகி வாழ்ந்தார்கள். இந்நிலை தந்தை பியன் வெனுவின் இதயத்தை ஆழமாகத் தொட்டது. தனது பங்குக் குருவின் அனுமதி பெற்று, தனக்குத் துணையாக ஒரு இளம்குருவையும் அழைத்துக்கொண்டு அக்கிராம மக்களுடன் இணைந்து வாழ, அவர்கள் நிலையை, துன்பத்தை உடனிருந்து செவிமடுத்து, அதற்கேற்ப துணைபுரிய அவ்விடத்து மக்களுடைய வாழ்வில் பங்கெடுத்தார். இளைஞர்களைக் கவர விளையாட்டுக்களில் கலந்து கொண்டார். தந்தை பியன்வெனுவின் இப்போக்கு மக்கள் அவர் மட்டில் துரிதமாக நம்பிக்கையும், அன்பும் கொள் ளத் துணைபுரிந்தது. இவ்வுறவின் அடிப் படையில் மக்களை மனம்திருப்பி இறைவனிடம் கொண்டு சேர்க்கும் பணியில் அதிசயிக்கத்தக்க பலனைப் பெற்றாஉ. ' "பரமன் பணி செய்து கிடப்பதன்றி வேறொன்றில்லை" என்பதற்கேற்ப இரவு பகலென்று பாராது தேவை எங்குண்டோ அங்கு சேவை செய்ய விரைந்தோடினார்.

- மரணப்படுக்கையில் போராடிய இளம் மனிதனை இரவுவேளையில், புயலின் வேகத்தையும், மழையின் கொடூரத்தையும் பொருட்படுத்தாது தரிசித்து அம்மனிதனுடன் உரையாடி வாழ்வு கொடுத்தார்.
- மனம்மாற மனமின்றிக் கடின உள்ளத்துடன் வாழ்ந்து, தம் அந்திய வேளையில், மரணவேதனைப்படுவோரைச்சந்தித்து, இரக்கத்துடனும், பொறுமையுடனும், தைரியத்துடனும், விவேகத்துடனும், சலியாத முயற்சியுடனும் அவர்களை அணுகி மனமாற்றத்துக்கு இட்டுச் சென்றார்.
- கிட்ட அணுகமுடியாத துர்நாற்றம் வீசுகின்ற நிலையில் வாழும் நோயாளிகளை நேரடியாகத் தேடிக் கண்டுபிடித்து பலமணி நேரங்களை அவர்களுடன் செலவழித்தார்.
- எத்துன்பத்திலென்றாலும் அவதியுறுவோரைக் கண்ணுற்றால் அவர்களை விலகிச் செல்லாது, தாழ்மையான உள்ளத்தோடு சேவை செய்தார்.
- அம்மை நோயால் மரணத்துடன் போராடிய இளைஞனுக்கு அன்புமுத்தம் கொடுத்து விண்ணக வீட்டிற்கு வழிகாட்டினார்.
- ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றுவதே குருத்துவப் பணியில் மிகச் சிறப்பு வாய்ந்தது என்பதை அனுபவத்தில் கண்டு, அதன் மூலம் பல மனிதரை இறைவன் பக்கம் இழுத்து வந்தார்.
- எல்லாவற்றுக்கும் மேலாக இவரில் காணப்பட்ட நற்பண்புகளாகிய சாந்தமான வழிகாட்டல், சரியான தீர்ப்பு, விவேகமுள்ள தீர்மானம், வெளிப்படையான பக்தி என்பன பலருக்கு ஆன்மீக வழிகாட்டியாக இருந்து பணிபுரிய வழிசெய்தது.

யூலாலிப் பங்கில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் மறைக்கல்வி வகுப்புக்களையும், "ஏழைகளின் நல்வாழ்வுக்கான" பணிகளையும், "நல்ல நூல்களின் சங்கம்" என்ற அமைப்பின் பணியையும் மேற்கொண்டார். தன் பணிகள் அனைத்தையும் திருக்குடும்பத்தின் பாதுகாவலில் ஒப்படைத்துச் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

தந்தை பியன்வெனுவின் உய்த்துணர்தல் அனுபவம் ஒன்று...

குருத்துவப் பணியில் தொடக்க காலத்தில் போர்டோ நகரப் பேராயரின் செயலாளராகப் பணிபுரியுமாறு பிதா நோ ஆய் கேட்கப்பட்டார். நம்பிக்கையின் அறிகுறியான இப்பதவியை மதித்தாராயினும் அவரிடத்தில் பற்றி எரிந்து கொண்டிருந்த "மனித சேவை" என்ற தீபம் சுடர்விட அது இடமன்று என உய்த்துணர்ந்து, ஆன்மகுருவின் ஆலோசனையுடன் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

மாறிய நெஞ்சத்தின் இறையனுபவத்திலே ஆழ்கடலில் விளைந்த முத்து

"பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது" (உரோ5:20) பியன்வெனுவின் வாழ்வில் இதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு குறிப்பிடும் ஆழ்கடலின் முத்தாக, அருளின் ஊற்றாக இருப்பது பியன்வெனுவின் உள்ளம் என்னும் ஆழ்கடலில் தேடிப் பெற்ற பெரிய செல்வமான மனமாற்றமாகும்.

(தொடரும்....)

கத்தோலிக்க அதிபர்களுக்கு இலக்கணமானவர் அமரர் அதிபர் சிங்கராயர் தார்சீசியஸ்

ஆசிரியப் பணியில் அர்ப்பணத்தோடு உழைத்தவர்

அமரர் திருவாளர் சிங்கராயர் தார்சீசியஸ் ஆசிரியர் 04.07.1939இல் பிறந்து 11.10.2019 அன்று தமது எண்பதாவது வயதில் இறைபதம் அடைந்திருக்கின்றார். இவர் குருநகரைப் பிறப்பிடமாகவும், வேம்படி வீதியினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டவர். லீலாவதி (லூட்ஸ்) என்பவரைத் திருமணம்செய்து அன்பான இல்லறத்தை அமைத்து ஆறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்திருக்கின்றார்.

ஆசிரியப் பணியில் தன் வாழ்வின் முப்பத்தாறு ஆண்டுகள் தியாக சிந்தையோடும் அர்ப்பணத்தோடும் உழைத்திருக்கின்றார். அவ்வகையில் கிழக்கு மாகாணத்தில் மிகவும் கஸ்ரமான பிரதேசங்களாக விளங்கிய பொத்துவில், கும்பிறுப்பிட்டி, இறக்கக்கண்டி, வெள்ளைமணல், புனித சூசையப்பர் ஆண்கள் பாடசாலை ஆகியவற்றில் சுமார் பத்து ஆண்டுகள் பணிபுரிந்திருக்கின்றார். பின்னர், யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில்(OLR) பதினேழு ஆண்டுகளாக ஆசிரியராகவும், உப அதிபராகவும் பணியாற்றி, தொடர்ந்து, இதே பாடசாலையில் பத்து ஆண்டுகளாக அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றிருக்கின்றார்.

பொதுநிலைப் பணியாளனாக நற்செய்திப் பணியாற்றியவர்

சி. தார்சீசியஸ் ஆசிரியர் அவர்களில் ஆழுமைச் பண்பைச் சிறப்பித்தது அவரின் புன்முறுவல் ஆகும். அவரது புன்சிரிப்பைப் பலரும் கண்டு அனுபவித்திருக்கின்றார்கள். அவரின் அப்புன்சிரிப்பு அவரது இறப்பின் இறுதிவரை இருந்திருக்கின்றது. எந்நேரமும் முகத்தில் படர்ந்திருக்கும், உள்ளத்தில் உறைந்திருக்கும் அவரின் கருணையுள்ளம் அவரது புன்சிரிப்பாக ஒளிர்ந்திருக்கின்றது. 'நற்செய்திப்பணி ஒரு சிறிய புன்முறுவலோடு ஆரம்பிக்கின்றது!' என்பார் புனித அன்னை திரேசா. பொதுநிலை நற்செய்திப் பணியாளனாக, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனாக சி. தார்சீசியஸ் ஆசிரியரை நாம் கண்டுகொள்ளலாம்!

உள்ளத்தில் கருணையும் ஒழுகுவதில் ஒழுக்கமும் நிறைந்தவர்

"மானிடப் பண்புகளில் தலையானது, ஏனைய பண்புகளுக்கு அடிப்படையானது கருணை. சி. தார்சீசியஸ் அதிபரின் முகாமைத்துவ செயற்பாடுகள் இந்தப் பண்பின் அத்திபாரத்திலேயே கட்டப்பட்டிருக்கின்றன" என அடைக்கலம் என்ற யாழ். புனித மரியாள் வித்தியாலய 125 ஆவது யூபிலி சிறப்பு மலரின் சி. தார்சீசியஸ் அதிபரைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும், "பாடசாலையில் இவர் முன்னுரிமை கொடுப்பது ஒழுக்கத்திற்கே. ஒழுக்கமில்லாத கல்வி நற்குடிமக்களை உருவாக்காது. எனவே, கல்விக்கு முதலாக ஒழுக்கத்தை மாணவர் மத்தியில் உருவாக்கி வருகின்றார்..." என விதந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

மனிதர்களையும் மதங்களையும் இயற்கையையும் மதித்தவர்

"இவரது இன்னும் ஒரு சிறப்பம்சம், தமது மதத்திலும் இறைபக்தியிலும் ஈடுபாடு இருப்பதுபோல், பிற மதங்களை மதிக்கும் பண்பாகும்" என அவரின் பரந்த உள்ளமும் சகோதர மனப்பான்மையும் குறித்துக்காட்டப்படுகின்றது. தாம் வாழும் இயற்கையும் தம்மைச்சுற்றியுள்ள சூழலும் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த கரிசனைகொண்ட இவர் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் நாளன்று மரம்நடும் விழாவினைச் சிறப்பாக முன்னெடுத்து மாணவர்கள் இயற்கையின்பால் தாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சூழலின்பால் அக்கறையும் கரிசனையும் கொண்டிருக்கவேண்டும் என்பதிலும் கருத்தோடு செயற்பட்டிருக்கின்றார்.

சக ஆசிரியர்கள்மீதும் மாணவர்கள் மீதும் அதீத அக்கறை கொண்டவர்

முகாமைத்துவ அல்லது நிர்வாக செயற்பாடுகளுடன் நின்றுவிடாது மாணவர்களின் ஆசிரியர்களின் சுக துக்கங்களில் தவறாது பங்குபற்றுகின்ற பண்பையும் பழக்கத்தையும் கொண்டிருந்தார் என யாழ். மரியாள் வித்தியாலய 125ஆவது ஆண்டு சிறப்பு மலரில் மேலும் கோடிட்டுக் காட்டுகின்றார்கள். மாணவர்கள் ஆசிரியர்கள்மீது எத்தகைய அக்கறை கொண்டிருந்தார் என்றால், 1995இல் யாழ். குடாநாடு பெரும் இடப்பெயர்வை சந்தித்த போது பாடசாலை சமூகத்தை அக்கொன்றும் இங்கொன்றுமாக சிதறடித்து சின்னாபின்னமாக்கி இருந்தது. இச்சூழலில் ஆசிரியர்களின் இருப்பிடங்களைத் தேடிச் தேடிச் சென்று அவர்களின் ஊதியத்தை வழங்கினார் எனச் சொல்லப்படுகின்றது.

மேலும், 1990களில் தீவகத்திலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்து யாழ். நகரை அடைந்த போது தார்சீசியஸ் அதிபர் அம்மக்களை வரவேற்று, தன்னுடைய பாடசாலையில் தஞ்சம் அளித்து, அம்மக்களுக்கும் மாணவர்களுக்கும் அடைக்கலம்கொடுத்து ஆதரவளித்திருக்கின்றார். குறிப்பாக, ஏழை மாணவர்கள்மட்டில் அதிக அக்கறைகாட்டி அவர்கள் கற்று வெவ்வேறு துறைகளில் தேர்ச்சிபெறச் செய்திருக்கின்றார். இடப்பெயர்வுகளும் இராணுவக் கெடுபிடிகளும் நிறைந்த அக்காலத்தில், வளங்கள் வசதிவாய்ப்புகள் இல்லாத சூழலில், பாடசாலையில் அரங்கமைத்து கலைவிழாக்களையும் நாடக ஆற்றுகைகளையும் செய்து மாணவச் செல்வங்களை ஆற்றுப்படுத்தியிருக்கின்றார், ஆற்றல்களில் அவர்கள் வளரச் செய்திருக்கின்றார்.

தன் மக்களையும் மண்ணையும் அன்பு செய்தவர்

அடுத்து, இம்மண்ணையும் தம் சூழலில் வாழ்ந்த மக்களையும் மிகமிக நெருக்கமாக அன்புசெய்த ஒரு பெருமகன் தார்சீசியஸ் ஆசிரியர் ஆவார். இதனை

அருட்பணி. செ. அன்புராசா அமதி

இரு வகைகளில் பார்க்கலாம்.

1. அவரின் நடை உடை பாவனையில் காணலாம். நம் மண்ணிற்கும் பண்பாட்டிற்குமே உரிய வேட்டியையும், நீண்ட மேலாடையையும் எப்போதும் அவர் அணிந்து வலம்வருவார். தூய தமிழையே எப்போதும் அவர் பேசுவார். அது யாராகவும் இருக்கலாம், எச்சூழலாகவும் இருக்கலாம். தூய தமிழிலேயே தன் உரையாடலைக் கொண்டிருப்பார்.

2. தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் தன்னோடு வாழ்ந்த மக்களையும் எப்படி நேசித்தார் என்றால் 1950களில் 'குருநகர் கலைக்கழகம்' என்ற அமைப்பை உருவாக்கி அப்போது மிக அவசியமாகக் குருநகரில் தேவைப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்ட சிப்பிகளில் முக்கிய ஆளாவார். மேலும், தான் வாழ்ந்து கொண்டிருந்த சமூகத்தோடு தன்னைப் பல வழிகளில் இணைத்துக்கொண்டு அரும் பணிகளை ஆற்றியிருக்கின்றார். தொடர்ந்து, குருநகர் கலைக்கழகத் தலைவர், குருநகர் நாட்டுக்கூத்து மன்றத் தலைவர், குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத் தலைவர், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணிக் கல்விக்குழுத் தலைவர், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குப் பேரவைச் செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக உறுப்பினர், யாழ். மாவட்ட உதைப்பந்தாட்டச் சங்க செயலாளர், புனித வளன் விளையாட்டுக் கழகச் செயலாளர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டத் தலைவர் போன்ற அமைப்புக்களில் இருந்து கொண்டு பல்வேறுபட்ட பணிகளை ஆற்றியிருக்கின்றார்.

நீத்தார் புகழுரை

நிறைவாய்ப் பணியாற்றியவர்

முன்னாள் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தையும் இப்போது கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் பேராசிரியருமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் எஸ்.வி.பீ. மங்களராஜா அடிகளார், "நான் குருநகரின் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய போதும், அதற்கு முன்னரும் பின்னரும், மிக நீண்ட காலமாக குருநகர்ப் பங்குச் சபையில் அர்ப்பணிப்போடு அருந்தந்தையர்களுடன் இணைந்து தார்சீசியஸ் மாஸ்ரர் பணியாற்றினார். அதன்பின், நான் OLR இல் (யாழ். அடைக்கல அன்னை ஆலயம்) பணியாற்றிக் கொண்டிருந்த போது தார்சீசியஸ் மாஸ்ரர் OLR (யாழ். புனித மரியாள் வித்தியாலயம்) அதிபராகப் பணிபுரிந்தார். அங்கும் அவரின் அர்ப்பணிப்புமிக்க சேவையை நான் நன்கறிவேன். அவரின் அர்ப்பணிப்புமிக்க சேவைக்கு நான் நூறுவீதம் சான்று பகர்வேன்!" என்றார்.

இவரின் பிரிவு குறித்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபரும் கவிஞருமான சோ. பத்மநாதன் குறிப்பிடுகையில், "தார்சீசியஸ்சை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் ஓ.எல்.ஆர் பாடசாலை அதிபர். நான் பலாலி ஆசிரியக் பயிற்சிக் கலாசாலை அதிபர். அப்போதைய என் ஆசிரிய மாணவர்கள் பயிற்சிக்குச் செல்கின்றபோது தார்சீசியஸ்சின் பாடசாலையை அதிகமாக விரும்புவார்கள். காரணம், அவரின் அன்பான அணுகுமுறையும், ஆளுமைப் பண்பும், நிர்வாகத் திறனும்!" என்றார்.

வாழ்வாங்கு வாழ்ந்தவர்

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து கொண்டு பல்கலைக்கழகம்போல பலநூறு மாணவர்களுக்குத் தன் அறிவைப் பகிர்ந்து, அவர்களை வளர்த்த ஒரு கல்விமான். நாடகங்களை ஆற்றுகை செய்பவராக, அவற்றை வளர்ப்பவராகத் திகழ்ந்த ஆக்கத்திறன் மிக்க கலைஞன். திறமைமிக்க விளையாட்டு வீரன். பேச்சாற்றலும் நிர் வாகத்திறனும் கைவரப்பெற்றவர். அனைவரையும் அன்போடு அணுகும் பக்குவம் பெற்ற பண்பாளன். நம்பிக்கை நிறைந்த இறைபற்றாளன். இவ்வாறு, வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதம் அடைந்த ஆசிரியர் சி. தார்சீசியஸ் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அவரது நிலைவாழ்வைக் கண்டு மகிழ்வாராக.

15ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 - 04 - 1939

விண்ணில்
04 - 10 - 2004

அமரர்
சூசைப்பிள்ளை சார்ல்ஸ்

AD 67

அன்புக்கு அர்த்தம் தந்து பண்புக்குப் பாடம் சொல்லி
பாசத்துக்கு நேசம் காட்டி ஆருயிர் துணையதை
தன்னுயிராய் எண்ணி ஈருயிரும் ஓருயிராய்
ஒன்றிணைந்து நம்மையெல்லாம்
நவரத்தினமாய் உலகாள ஆசான், அறிஞன்
ஆக்கி உன் தேகம் தேய கடலாண்டு
எம்மைக் கரைசேர்த்த கண்ணியவான் எங்கள்
காவல் தெய்வம் நீங்கள்
தந்த எண்ணிலா அன்புக்கு என்றும் நிகரில்லாத்
தாயான எம் தாய்க்கெல்லாம் தாயானவன் நீ
ஆண்டுகள் மூவைந்து மூழ்கிப் போனாலும் ஆறாத
உன் பிரிவுக்கடலில் நித்தமும் மூழ்கித் திளைக்கின்றோம்
கண்ணீரில் தத்தளிக்கிறோம் தந்தையே
உன் பிரிவால் என்றும் எம் இதயக்கோவிலில்
நீரே ஐயா

பாசமுடன்
நினைவுகூரும்
அருட்தந்தை சா.ஜஸ்ரின்
(மகன்)

5ம் வட்டாரம்
மண்டை தீவு

1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 - 08 - 1964

மறைவு
27 - 10 - 2018

அமரர்
பாக்கியநாதர் கிளாரன்ஸ் யோகநாதன்

AD 71

கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல்
கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது.
(தி.பா 42:1)

அன்புமிக்க இறைவா! உமது விருப்பப்படி உம்மண்டை
வந்திருக்கும் உமது அடியான் பாக்கியநாதர் கிளாரன்ஸ் யோகநாதனை
அனைத்துப் பாவக்கட்டுக்களில் நின்று விடுவித்து நித்திய
வான்வீட்டில் வைத்துக் காத்திட உம்மை வேண்டுகின்றோம்.

ஆமென்

4ம் வட்டாரம்
மண்டைதீவு
யாழ்ப்பாணம்

தகவல்
மனைவி, பிள்ளைகள்

காவலன் கலசம்

நற்செய்தி அறிவிப்புப் பணியின் சவால்கள்

தூய ஆவியின் அருட் பொழிவு பெற்ற என் அன்பான வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்தும் இறையாசீரும் உண்டாவ தாக! இவ்வாண்டு உலக அளவில் தூய ஆவியில் புதுவாழ்வு என்கிற மையக்கருத்தில் (Life in the Spirit) அருங்கொடை இயக்கங்கள் செயற்படத் திருத்தந்தை அழைப்பு விடுத்திருக்கும் வேளையில், அதனோடு நெருங்கிய தொடர்புடைய நற்செய்தி அறிவிப்புப் பணியினைக் குறித்தும் சிந்தித்து செயற்பட, ஒரு ஏற்ற வரலாற்றுத் தருணம் இதுவென்றால் மிகையாகாது.

கோழைகளாகக் கதவுகளுக்குப் பின்னே அஞ்சி ஒடுங்கிப் போயிருந்த சீடர்கள், பெந்தகோஸ்துப் பெருவிழாவின் போது தூய ஆவியின் அருள் பொழி வைப் பெற்ற பிறகுதான், நற்செய்தியை அறிவிக்க வீரமிக்க தூதுவர்களாய் உலகெங்கும் புறப்பட்டுச் சென்றார்கள் என்பது நற்செய்தி நூல்களின் இறுதிப்பகுதியும் திருத்தூதர்பணிகள் நூலும் நமக்குச் சொல்லும் பாடமாகும்.

தூய ஆவியில் அவர்கள் பெற்ற புதுவாழ்வு, நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு அவர்களை உந்தித்தள்ளியது என்றால் அது மிகையாகாது.
நாமும் இவ்வாண்டு தூய ஆவியில் புதுவாழ்வு இயக்கத்தை முனைப்புடன் செயல்படுத்தும் இவ் வேளையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டு 2019 அக்டோபர் மாதத்தை சிறப்பு நற்செய்தி அறிவிப்பு மாதமாக அறிவித்துள்ளார்கள். திரு அவையின் முதல் நற்செய்தி அறிவிப்புத் திருத் தூது மடலாக Maximum illud (literal translation "that momentous" that momemtous holy charge) "உடனடி புனித கடமை" 1919 ஆம் ஆண்டு திருத்தந்தை 15ம் பெனடிக்ட் அவர்களால் வெளியிடப்பட்டது. இம்மடலின் நூ ற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் அதே கடமையை நமக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நினைவூட்டுகின்றார்.

வெற்று மேற்பூச்சுப் போன்ற வானளாவிய ஆலயக் கோபுரங்கள் கட்டு வதும் அடுக்கடுக்காக புனிதர்களை ஒரு வர் மேல் ஒருவரை வைத்து கெபிகள் கட்டுவதும் நிறுவனங்களை நடத்து வதும் பல இலட்சம் செலவு செய்து வான வேடிக்கைகளுடன் திருவிழா கொண்டாடுவதும் உண்மையான வளர்ச்சியின் அடையாளங்களாக இருக்கமுடியாது. வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் மூவேளை செபத்தைத் தொடர்ந்து திருத் தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரையில் இதனைக் குறிப்பிட்டு, நமது கிறிஸ்தவ இறைநம்பிக்கையானது தோகை விரித்து அழகாக நடனமாடும் மயிலைப்போல முன்புறம் அழகாகவும் பின்புறம் அரு வருப்பாகவும் இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டார். தூய ஆவியில் நாம் பெறு கின்ற புதுவாழ்வு அனுபவமும் அதனால் நற்செய்தி அறிவிப்புப் பணியில் நாம் செலுத்துகின்ற அக்கறையும் ஆர்வமும் தான் இறைநம்பிக்கை வளர்ச்சி பெறு வதன் உண்மையான அடையாளங்களா கும். திரு அவையில் தற்போது நற்செய்தி அறிவிப்பு பணி இரண்டு வழிகளில் செய்யப்படுகின்றது.

1) புதிய நற்செய்தி அறிவிப்பு : அதாவது, இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியை அறி யாதவர்களுக்கு அச்செய்தியை அறி விப்பது.

2) மறு நற்செய்தி அறிவிப்பு : அதாவது, இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ ரானாலும், அதை உணராமல் இறை நம்பிக்கையில் தளர்ந்து வாழ்வோரை நம்பிக் கையில் உறுதிப்படுத்திக் கிறிஸ்து வின் பிரசன்னத்தை உணரச்செய்வது.

புதிய நற்செய்தி அறிவிப்பு

தொடக்ககால கிறிஸ்தவர்களும் சரி, நம் நாட்டில் இறைநம்பிக்கையில் நம் முன்னோர்களும் சரி, கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதிலும் தங்கள் இறை அனுபவத்தைப் பிறருக்குத் துணிவுடன் அறிவிக்கவும் சற்றும் தயங்கவில்லை. "கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள். அவர் கடவுளின் வலப்பக்கத்திற்கு உயர்த் தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவி யைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார்" (தி.ப 2:32-33). தலைமைக்குருக்களும் அதிகாரிகளும் திருத்தூதர்களின் நற்செய்தி அறிவிக்கும் பணியைத் தடுக்கும் நோக்குடன் அவர்களை அச்சுறுத்திய போது, அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது" (தி.ப. 4:20). "இறந்த அவர் உயிர்த்தெழுந்த பின்பு அவரோடு உண்டு குடித்த நாங்களே இதற்கு சாட்சிகள்" (தி.ப. 10:41).

திரு அவையின் புனித மரபிலே இப்படிப்பட்ட சான்று பகரும் துணிவு நம் நடுவே காணாமற் போனது எப்போது? ஏன் அப்படி காணாமற்போனது? துன் புறுத்தப்படுவோமோ என்கிற பயம், நம்முடைய சலுகைகளையும் அதிகாரத் தையும் உலகளாவிய இலாபங்களையும் இழந்த விடுவோமோ என்கிற அச்சம் போன்றவை நற்செய்தி அறிவிக்கும் பணி யினை முடக்கும் ஒருசில காரணங்களா கும். இத்துணை சவால்கள் மத்தியிலும் வீதிமுழக்கங்கள், கிராமப்பிரசாரங்கள், கலைவழிப்பிரச்சாரங்கள், சான்று பகரும் வாழ்வு, செபங்கள் போன்றவற்றின் வழி யாக இன்றும் பல்வேறு மறைமாவட்டங் களில் நற்செய்தி அறிவிப்பு பணி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

நற்செய்தி அறிவிப்பு பணியினை பல அருட்பணியாளர்கள், நற்செய்திப் பணியாளர்கள் ஒத்துழைப்பு டன் பல்வேறு புதிய முன்னெடுப்பான முயற்சிகளை எடுத்து, நற்செய்தி அறிவிக்கும் பணியினை செய்து வருகின் றது என்பது ஆறுதல் தருகின்ற செய்தியாகும். இப்பணியில் ஒவ்வொருவ ரின் ஒத்துழைப்பும் முழுமையாக இருக்க வேண்டும் என ஆசிக்கின்றேன்.

மறு நற்செய்தி அறிவிப்பு

அண்மையில் "காரிஸ் இந்தியா" என்ற பத்திரிகையில் இந்நிகழ்வு வெளி யிடப்பட்டிருந்தது. ஒரு பெரிய விளை யாட்டு அரங்கிலே திருப்பலிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுநிலையினர், அருள் சகோதரிகள் என இரண்டாயிரத் திற்கும் மேற்பட்டோர் திருப்பலிக்கா ஒன்று கூடியிருந்தனர். திருப்பலி நிறைவேற்றக் குருக்களும் வந்திருந்த னர். திருவுடை அணிந்து திருப்பலிக்குத் தயாரானார்கள். அப்போது திடீரென அரங்கத்தின் நுழைவு வாயில் வழியாகக் கறுப்பு உடையும் முக மூடியும் அணிந்து, கையில் இயந்திரத் துப்பாக்கியுடன் இருவர் உள்ளே நுழைந்து, "உங்கள் உயிர் மேல் ஆசையிருந்தால் இயேசுக்கிறிஸ்துவை மறுதலிக்கும் விதமாக இங்கிருந்து ஓடி விடுங்கள். அப்படி ஓடாதவர்களை நாங் கள் சுட்டுக் கொல்லப் போகிறோம்" என்று அச்சுறுத்தினார்கள். அரங்கத்தில் கூடியிருந்தவர்களில் 80 சதவீதம் பேர்கள் (அருட்பணியாளர்கள், அருள் சகோதரிகள், பொதுநிலையினர் உட்பட) ஓட்டம் பிடித்தார்கள். அருட்சகோதரிகள் பொதுநிலையினர் உள்ளிட்ட வெறும்

இருநூறு பேர்கள் அடங்கிய சிறுகூட்ட மும் இரண்டு குருக்களும் மட்டுமே அங்கு எஞ்சியிருந்தார்கள். அப்போது முகமூடி அணிந்தவர்கள் முகமூடியைக் கழற்றி விட்டு, இப்போது நாம் திருப்பலி யினை தொடங்கலாம்.

வெளிவேடக்காரர்கள் ஓடி விட்டார்கள்" என்றார்கள். இச்செய்தி நமக்கொரு நெருடலை ஏற்படுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கும் வித மாக ஏன் அப்படி ஓட்டம் பிடித்தார் கள்? இறைநம்பிக்கையில் வேரூன் றாமையினால் துணிவை இழந்தது முதல் காரணமாகும். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை அறியவுமில்லை, அனுபவிக்கவும் இல்லை.

திருஅவை நடத்தும் பெரிய நிறுவனங்களால் தங்களுக்குக் கிடைக்கும் புகழ், கௌரவம், செல்வம் இன்னும் பல்வேறு உலக ஆதாயங்கள் தரும் போதை அவர்களின் இறைநம்பிக் கையை மழுங்கடிக்கச் செய்து விட்டதோ என்ற ஐயப்பாடும் எழுகின்றது. விவிலியத்தையும் திரு அவையின் போதனையையும் அறிந்து, திருவழிபாட் டில் உயிர்த்த கிறிஸ்துவை சந்தித்த அனுபவங்களைப் பெறாமல், பொருளி ழந்த, தவறாகப் புனையப்பட்ட, திரு அவை யினால் ஏற்றுக் கொள்ளப்படாத பக்தி முயற்சிகளில் மட்டுமே ஈடுபட்டு மனத் திருப்தி அடைந்து விட்டு, இறைநம்பிக் கையில் வளராத நிலைகளும் கூட மிக முக்கியமான காரணிகளாகும்.

கடந்த நூற்றாண்டில் கூடிய இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், "கிறிஸ்தவ மக்கள் தவ- றான பக்தியில் இன்பம் காணச் செய்யாதபடி வழிநடத்தப்பட வேண்டும்" என்றது. இச்சூழலில் உண்மையான இறைநம்பிக்கையை வளர்க்க விவிலிய அறிவை வளர்த்தல், விவிலிய வாசிப்பு, விவிலிய அறிவை திருவழிபாட்டிலும் செப வேளைகளிலும் இறையனுபவமாக மாற்ற வழிவகுத்தல், தூய ஆவியாரின் அருள் பொழிவினால் வல்லமை நம் வழியாக கடந்து செல்கின்ற புதுவாழ்வு அனுபவத்தைப் பெறுதல், அதன் விளை வாக நற்செய்தி அறிவிப்புப் பணியினை உற்சாகத்துடன் செய்தல் அருள்பணி யாளர்களும் நற்செய்திப் பணியில் ஆர்வமுள்ள பணியாளர்களும் ஒவ் வொரு மறைமாவட்டத்திலும் செய்து கொண்டு வருகின்றனர் என்பது பாராட்டு தலுக்குரியது.

தொடக்கால காலத் திரு அவை யிலும் கூட கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சி நிலையை அடை யும் படியாக திருத்தூ தர்கள் தூண்டி யெழுப்பினார்கள் என்று புதிய ஏற்பாட்டு நூல் களிலே வாசிக்கின்றோம்." ஆதலின், கிறிஸ்துவைப் பற்றிய படிப் பினையின் தொடக்க நிலையிலேயே நின்று விடாமல், நாம் முதிர்ச்சி நிலையை அடைய வேண்டும்" (எபி 6:1-2). விவிலியத்தில் கூறப்பட்டுள்ள முதிர்ச்சி நிலையை அடைய வழிவகுப்பதே மறுநற் செய்தி அறிவிப்பாகும்.

மேற்கூறிய இரு கோணங்களில் நற்செய்தி அறிவிப்புப் பணியி னைச் செய்ய திருத்தந்தையின் நற்செய்தி அறிவிப்பிற்கான சிறப்புமாதம் - அக்டோபர் 2019 பற்றிய அறிவிப்பும் விளக்கங்களும் நல்ல ஒரு வாய்ப்பினை நற்செய்திப் பணியாளர்களாகிய திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதை உணர்த்தும் வகையில் தான் நற்செய்தி அறிவிப்பின் சிறப்பு மாதத்திற்கான சின்னத்தில் கூட " திருமுழுக்குப் பெற்றோரும் அனுப்பப்பட்டோரும்" என்ற வாசகங்கள் இடம் பெறுகின்றன. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் தொடக்க கால கிறிஸ்தவர்களைப் போல உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்கின்ற இறை பிரசன்னத்தில் அனுபவத்தைப் பெறவேண்டும்.

அந்த இறைபிரசன்னத்தில் அனுபவத்தையே பிறருக்கும் அறிவிக்க வேண்டும். இந்த இலக்கோடு நற்செய்தி அறிவிப்பின் சிறப்பு மாதத்தை நம் மறைமாவட்டங்களில் பரவவும் தூய ஆவியார் நம்மை வழிநடத்தும் படியாக, நாம் அனை- வரும் ஒருமனப்பட்டு செபிப்போம். தமிழக திருஅவை எழுச்சிமிகு பாதை யில் பயணிக்க நாம் ஒவ்வொருவரும் உழைத்திடுவோம். நற்செய்தி அறிவிப்பு பணிக்கான இத்திட்டங்களை செயல்படுத்த ஒவ்வொருவரும் மேலான செபங்களையும், பொருளாதார உதவி களையும், ஆலோசனைகளையும், உடலுழைப்பையும் அன்புடன் வழங்கி மகிழ்வோம். இவ்வாண்டு நடை பெறும் அனைத்து சிறப்பு நிகழ்வுகளிலும் பங்குபெறுங்கள் என அன்புடன் அழைக்கின்றேன். நற்செய்தியின் மகிழ்ச்சி நம் நடுவே குடிகொள்வதாக.

கோழைகளாகக் கதவுகளுக்குப் பின்னே அஞ்சி ஒடுங்கிப் போயிருந்த சீடர்கள், பெந்தகோஸ்துப் பெருவிழாவின் போது தூய ஆவியின் அருள் பொழி வைப் பெற்ற பிறகுதான், நற்செய்தியை அறிவிக்க வீரமிக்க தூதுவர்களாய் உலகெங்கும் புறப்பட்டுச் சென்றார்கள் என்பது நற்செய்தி நூல்களின் இறுதிப்பகுதியும் திருத்தூதர்பணிகள் நூலும் நமக்குச் சொல்லும் பாடமாகும்.

சிந்தனை

மனிதராகப் பிறந்தவர்களுக்க எவ்வளவோ நற்பேறுகள், பாக்கியங்கள் உண்டு. அந்த நற்பேறுகளில் எல்லாம் தலைசிறந்த பேறு பிறருக்குப் பணி, சேவை செய்வதே என்பார்கள் பெரி- யோர்.

ஆகையால் நாம் இறைவனுக்கும் அவருடைய மக்களுக்கும் பணி செய்வதையே மிகப் பெரிய பேறாக நினைத்து வாழ்வோம். மேலும் அதை கடமைக்காகவோ அல்லது அடிமை மனோபாவத்தோடோ செய்யாமல், உள மாரவும் உள்ளார்ந்த அன்போடும் செய் வோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

விண்ணக வாழ்வில் நான்கு வருடங்கள்

மண்ணில்
13
05
1948



விண்ணில்
23
10
2015

அமரர்
அருட்தந்தை இராயப்பு மரியநாயகம்
Rev.Fr.Dr.R.Mariyanayagam (OMI)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"
எனும் வேத வாக்கிற்கிணங்க
நான்காண்டுகள் கழிந்தாலும்
பத்திரமாய் உம் நினைவுகள்
எம் மனதினில்...
முப்பத்தைந்து வருடங்கள் குருத்துவப் பணியை
ஓய்வின்றி சளைக்காது செம்மையுற ஆற்றிய
தியாகச் செம்மல் நீங்கள்!
முத்தான வாழ்க்கையில் நீங்கள் பதித்த தடங்கள்
எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
என்றும் எம் நினைவில்!

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

AD 65

திருமுழுக்குப் பெற்று....

(04ம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் கடவுளுக்கும் திருஅவைக்கும் தந்தையாகிட முடியாது. (புனித சிப்ரியன்) எமது பணியானது கடவுளின் தந்தையின்மை மற்றும் திருஅவையின் தாய்மை என்பவற்றில் வேரூன்றியுள்ளது. உயிர்ப்பு நாள் அன்று உயிர்த்த இயேசுவினால் கொடுக்கப்பட்ட கட்டளை திருமுழுக்கினால் கிடைக்கப்பட்டது. தந்தை என்னை அனுப்பினது போல் நானும் உங்களை அனுப்புகின்றேன்.

தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடையபாவங்களைமன்னிக்கின்றீர்களோ அவை மன்னிக்கப்படும். (யோவான் 20: 19-23) இப்பணியானது கிறிஸ்தவர்களாகிய நம்முடைய அடையாளத்தின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தந்தையின் வளர்ப்பு பிள்ளையாக தங்களின் அழைத்தலை உணரவும் தங்களின் தனிப்பட்ட கௌரவத்தை அறிந்து மனித வாழ்வின் உண்மையான பெறுமதியைப் பாராட்டுவதும் எமது பொறுப்பாகும் என திருத்தந்தையின் மறைபரப்புச் செய்தி தொடர்கின்றது.

ஆலய தளபாடங்கள் விற்பனைக்கு

ஆலயத்தில் பயன்படுத்தப்படும் புதியபீடம், பீடக் கதிரைகள், வாசக மேடை, பாவசங்கீர்த்தனத்தொட்டி, முட்டி என்பன குறைந்த விலையில் விற்பனைக் குண்டு. **புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.**

45ம் நினைவு நாள்

பிறப்பு
02
12
1938

இறப்பு
11
09
2019

அமரர்
பிரான்சிஸ் சேவியர் (புஸ்பநாயகம்)

நீதியுள்ள ஆண்டவர் நேரிய செயல்களை விரும்புகின்றார்
அவர் தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்
தி.பா.1:7

இரக்கமுள்ள இறைவா நிலையற்ற உலகில் வாழ்ந்து
நிலையான வான்வீட்டிற்கு அழைத்துக்கொண்ட
அமரர் பிரான்சிஸ் சேவியர்
என்னும் அடியானுக்கு நிலை வாழ்வை
அளித்திட வேண்டுகின்றோம்.

AD 72

பாங்சால் வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

விண்ணக வாழ்வில் இருபத்தைந்து

மண்ணில்
1929
09
30

விண்ணில்
1994
10
24

அமரர்
ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்
[இளைப்பாறிய பிரதம எழுதுநர் சுகாதார சேவைகள் திணைக்களம்]

கண்ணின் இமைபோல் – எம்மை
காலமெல்லாம் காத்தவரே
கண்ணீர் சொறியும் – எம் விழிகளில்
காவியமாக வாழ்பவரே
காத்திருப்போம் காலமெல்லாம் – உம்
கருணை வதனத்தை மீளவும் தரிசிக்க

அமரர் ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ் அவர்களின் அமரத்துவத்தின் 25 வருட நிறைவையொட்டி மிருசுவில் புனித நிக்கொலஸ் தேவாலயத்தில் 24.10.2019 வியாழன் மாலை 4 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் ஆன்ம சாந்தித் திருப்பலியில் கலந்து செபிக்க உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில்

குடும்பத்தினர்
ஜோஸ் லூர்ட்ஸ்

ஐம்பதாவது திருமணநாள் நினைவு

19.10.2019
அமரர்
மரியா மின்னொளி ஜீலியன்
(லூர்த்துமலர்)

AD 68

கிறிஸ்துவோடு என்றும் இருக்கின்றாய் என்பதை முழுமையாக நம்புகின்றேன் நியாயமான எம் தேவை நிறைவேற யேசுவிடம் எமக்காய் மன்றாடும்.

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றென்றும்
உம் நினைவுகளுடன்
அன்பான கணவர்
ஜீலியன்

30ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15
10
1927

உதிர்வு
21
06
1989

அமரர்
அந்தோனிப்பிள்ளை பாக்கியநாதர்

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08
09
1937

உதிர்வு
26
10
2018

அமரர்
பாக்கியநாதர் மேரியோசப்பின்

AD 62

தந்தையே உம் பெயரை மாட்சிப்படுத்தும்
(யோவான் 12:28)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

2ம் மாத நினைவு

தோற்றம்
1938
09
02

மறைவு
2019
08
23

அமரர்
திருமதி மரியராணி அடைக்கலம் மயில்வாகனம்
(இளைப்பாறிய ஆசிரியை)

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"
(திபா 84:1)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
புன்னகை முகத்ததுடனே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமக்குக் கல்வி தந்து காத்து வளர்த்தீர்
காலங்கள் தோறும் உம் நினைவோடு வாழ்ந்து
என்றும் நிலைவாழ்விற்காய் செபித்திருப்போம்
சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
இறையடி சேர்ந்த பின்பும் என்னை மறவாது
எனக்காக இடைவிடாது செபியுங்கள்

AD 70

3013, 1/1
சென். சில்வெஸ்டர்ஸ் வீதி,
கல்கிசை.

கணவன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்

விண்ணக வாழ்வில் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
08
1934

உதிர்வு
13
10
2010

அமரர்
ஜோசப் பிரான்சிஸ் (குழந்தை)

"இறைவா, நான் உம்மை நோக்கி
கூப்பிடுகிறேன்;
எனெனில், நீர் எனக்கு பதில் அளிப்பீர்,
என் பக்கம் உம் செவியைத்
திருப்பியருளும்
என் விண்ணப்பத்திற்கு செவி
சாய்த்தருளும்"

AD 66

இல 7, கடற்கரைவீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்

பாசமுடன் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

31ம் நாள் நினைவு

பிறப்பு
20
07
2000

இறப்பு
22
09
2019

அமரர்
பக்திநாயகன் தனுஸ்ரான்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

AD 69

கூழாமுறிப்பு
ஒட்டிசுட்டான்

தகவல்
குடும்பத்தினர்

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா யாழ் ஆயரைச் சந்தித்தார்

புதிய இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அவர்கள் தமது யாழ். வருகையின் போது யாழ். ஆயரை ஆயர் இல்லத்தில் கடந்த 17.10.2019 வியாழக்கிழமை அன்று சந்தித்தார். இச் சந்திப்பின் போது வடக்கின் பாதுகாப்பு நிலைமை பற்றியும் குறிப்பாக வடக்கில் இராணுவத்தின் பிடிகளிலுள்ள மக்கள் குடியிருப்பு நிலங்கள் பற்றியும் அவற்றை உடன் மக்கள் பாவனைக்குக் கையளிப் புத் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. ஆயர் அவர்கள் இச் சந்திப்பின்போது அண்மையில் யாழில் திறக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்திற்கான பயணிகளுக்கு சீரான பாதை ஒன்றை அமைத்துத் தருமாறும் இராணுவத்தளபதியிடம் வேண்டி நின்றார்.

தேர்தல் பிரச்சாரத்தில் என் பெயரைப் பயன்படுத்தாதீர்கள் ஊடகவியலாளர் சந்திப்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

நான் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவன் அல்ல எனது பெயரைப் பாவித்து சில அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரம் செய்ய முயல்வது தவறு என அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில் தேர்தல் பிரச்சாரத்தில் போஸ்டர் பிரதிகளில் எனது பெயரைப் பிரசுரித்து அரசியல் இலாபம் தேட முயல்வது தெரியவந்துள்ளது.

நான் எந்த அரசியல் கட்சியையும் சாராதவன். எனது பெயரைப் பாவித்தல் தவறான செயல் ஆகும். மேலும் கடந்த காலத்தில் கத்தோலிக்க திருஅவை ஆளும்கட்சி, பிற கட்சி களின் விருப்பு வெறுப்புகளில் கலந்துரையாடல் தோழமை கொண்டதை வைத்துக் கொண்டு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நான் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கு வதாக அவர்களுக்கு ஏற்ற விதத்தில் தீர்மானிப்பது அதை வெளியிடுவது தவறான ஒன்றாகும். எனது பெயரைப் பாவிக்கும் யாருக்கும் நான் பொறுப்புக் கூறமாட்டேன் என்று ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது கர்தினால் ஆண்டகை தமது கருத்துகளைத் தெரிவித்தார்.

அக்கராயன் பங்கின் ஆன்மீகப் புதுப்பித்தல்

அக்கராயன் பங்கில் ஆலயத் திருவிழாவுக்கு முன்னதாக ஒரு மாத ஆன்மீகப் புதுப்பித்தல் ஒன்று கடந்த ஆடி 28 ஆம் திகதி முதல் ஆவணி 25 வரை நடைபெற்றது. இவ் ஆன்மீகப் புதுப்பித் தலின்போது அன்பிய ஒன்றுகூடல்கள், இல்லத் தரிசிப்பு, கருத்தமர்வுகள் மற்றும் அருட்சாத னங்கள் வழங்குதல் என்பன இடம்பெற்றன.

இத்தியான நாட்களில் அமலமரித் தியாகிகள் சபை அருட்பணி சேகர் அடிகளார் பங்கில் தங்கியி ருந்து இப்புதுப்பித்தல் செயற்பாடுகளை நெறிப்படுத் தியிருந்தார். இப்புதுப்பித்தல் நாட்களில் அருட்சகோ தர்கள் ரூபின், அலெக்ஸ் அவர்களும், திருக்குடும்பக் கன்னியர்களும் உடனிருந்து உதவி புரிந்தனர். இறுதிநாள் நன்றித் திருப்பலியை அருட்பணி சுலக்ஷன் நிறைவேற்றினார். தொடர்ந்து ஆரோக்கிய அன்னையின் திருவிழாத் திருப்பலியை குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

திருநாட்காலங்களில் அமலமரித் தியாகிகள் அருட்சகோதரர்கள் வழிபாடுகளையும், பாடல்களையும் நெறிப்படுத்தினர். இவ் அனைத்து நிகழ்வுகளையும் பங்குத்தந்தை அருட்பணி. ரவல் அடிகளார் நெறிப்படுத்தினார்

வைத்தியசாலை ஆன்மீகப் பணியில் மாணிக்கவிழா

யாழ் போதனா மருத்துவமனையில் வீற்றிருக்கும் அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா வெகு சிறப்பாக மருத்துவமனைக் கத்தோலிக்க சமூகத்தினரால் கொண்டாடப் பட்டது. இவ்வருடம் அமலமரித்தியாகிகள் ஆன்ம குருக்களாக முழுப் பணிப்பொறுப்பேற்று நாற்பது ஆண்டுகளை நினைவுகூருகின்ற மாணிக்க விழாவினை நன்றியுணர்வுடன் நினைவுகூர்ந்தனர்.

இவ்வாலய முதல் ஆன்மகுருவாகிய அருட்பணி பிரான்சிஸ் டானியல் அமதி அடிகளார் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அத்துடன் மாணிக்கவிழாவினை நினைவுகூரும் முகமாக வரலாற்று நினைவுச்சுடர் பிரதி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இங்கு ஆன்ம குருக்களாகப் பணியாற்றிய குருத்துவ யூபிலி விழாவினைக் கொண்டாடிய அருட்பணியாளர்களும், ஓய்வுநிலைத் தாதியர்களும் தமிழ் கலாசார பாரம்பரியத்துடன் கௌரவிக்கப்பட்டார்கள். இறுதியாக அன்னையின் ஆசீருடன் திருவிழா நிறைவுற்றது.

திருமுழுக்குப்பெற்ற... (1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரகடனம் செய்து இவ்வாண்டு மறைபரப்புத்தினத்தில் நீங்கள் திருமுழுக்குப்பெற்று அனுப்பப்பட்டவர்கள் என்ற தொனிப்பொருளில் சிந்திக்க அழைத்துள்ளார்.

மறையுரையைத் தொடர்ந்து பொது நிலையினர் திரு நிலையினரிடம் திரு விவி லியத்தை அடையாளமுறையில் கையளித்து செல்லுங்கள் திருஅவைக்குச் சீடர்களை ஏற்படுத்துங்கள் எனப் பணித்து நின்றார்.

இத் திருப்பலியில் திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளின் இயக்குநர் அருட் தந்தை எஸ்.ஏ.றொஷான் அடிகளாரும், நிதி முகாமையாளர் அருட்பணி நேசன் அடிக ளாரும், பேராலயப் பங்குத்தந்தையர்களும், இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சி

இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும், கல்வியை நிறைவு செய்து வேலை வாய்ப்பிற்காகக் காத்திருக்கும் இளையோருக்குமான தலைமைத்துவப் பயிற்சி இம்மாதம் 07ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை யாழ். மறைக்கல்வி நடுநிலைய வளாகத் தில், யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

தலைமைத்துவம், சுயமதிப்பு, இலக்கமைத்து முன்னேறுதல், ஆளுமை விருத்தி, உணர்வுகளைக் கையாழுதல், அரசியலில் இளையோரின் கடமைகள், சமூக மேம்பாட்டில் போதைப்பொருளின் தாக்கம், சமூக வலைத் தளங்களும் இளையோரில் அவை ஏற்படுத் தும் தாக்கங்களும், உன்னால் முடியும், தலைமைத்துவத்தை ஏற்பதற்கான தடைகள், அரங்கச் செயற்பாடுகள் போன்ற தளங்களில் கருத்துரை, குழுச்செயற்பாடு, விளையாட்டுக்கள் என்பவற்றினூடாக இப்பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 50ற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றிப் பயனடைந்தனர். பயிற்றப்பட்ட இளையோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 26ம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வினைத் தலைமைத் துவப் பயிற்சியில் பங்குபற்றிய இளையோரே முன்னின்று நடத்தவுள்ளமையும் இங்கு குறிப் பிடத்தக்கது.

நாவாந்துறையில் இளையோர் ஒன்றுகூடல்

நாவாந்துறைப் பங்கு இளையோருக்கான ஒன்றுகூடல் 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று புனித நீக்கிலார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு. எறிக் றொசான் அவர்களின் ஏற்பாட்டில் உதவிப்பங்குதந்தை அருட்திரு. சதீஸ் அவர்களின் தலைமையில், யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது. இதில் 60ற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றினார்கள். இளையோரை வலுப்படுத்தும் நிகழ்வும் கருத்துரைகளும், தலைமைத்துவத்தை மேம்படுத்தும் விளையாட்டுகளும் நடை பெற்றன.

இளவாலைப் பங்கிற்கான மறைக்கல்வி தினவிழா

இளவாலைப் பங்கிற்கான மறைக் கல்வி தின விழா 29.09.2019 அன்று இளவாலைப் பங்குத்தந்தை அருட்பணி ம.யேசுரட்ணம் அடிக ளார் தலைமையில் புனித யூதாததேயு ஆலயத்தில் காலை 5.30 மணி யளவில் திருப்பலியுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அவர்கள் தமது மறை உரையில் ஏனைய உலகுசார்ந்த கல்வியை பிள்ளைகளுக்குப் பெற்றோர் வழங்குவதில் காட்டும் அக்கறையைப் போல் மறைக்கல்வியிலும் காண்பிக்க வேண்டும் என்றும் மறைக்கல்வியின் அவசியத் தைப் பற்றியும் மிகவும் தெளிவான அறிவுறுத்தல்களைப் பங்கு மக்களுக்கு வழங்கினார்.

திருப்பலி நிறைவுற்றதும் மறைக்கல்வி மாணவர்களுக்கு மகிழ்வூட்டும் விளை யாட்டுக்கள் இடம் பெற்றன. மாணவர்கள் இதில் மிகவும் ஆர்வமுடன் செயற்பட்டார்கள். அதைத் தொடர்ந்து மாலை புனித அன்னாள் ஆலய மாணவர்கள் புனித யூதாதேயு ஆலய மாணவர்கள் புனித யாகப்பர் ஆலய மாணவர்கள் மற்றும் புனித வளனார் விடுதி மாணவர்கள் இளவாலைக் கன்னியர் மட விடுதி மாணவிகள் அனைவரும் இணைந்து இளவாலை புனித அன்னாள் ஆலயக் கலையரங்கில் கலை நிகழ்வுகளை நடாத்தினர். இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடம் அருட்சகோதரி டீ. ஸ்ரொபியா அவர்களும் சிறப்பு விருந்தினராக மாரீசன் கூடல் பங்குத் தந்தை அருட்பணி க.டினேஷன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நித்திய அர்ப்பணம் பெற்ற அருட்சகோதரிக்கு வாழ்த்துக்கள்

கொழும்புத்துறைப் பங்கைச்சேர்ந்த அருட்சகோதரி றொஷினி மரியா டொன் பொஸ்கோஅவர்கள் தமது துறவற நித்திய அர்ப்பண வாக்குறுதியைக் கடந்த *25.08.2019* அன்று **LITTLE SISTERS of the POOR** சபையில் பிரான்சில் வழங்கினார். இறைவன் அருட்சகோதரி அவர்களுக்கு வழங்கிய நிறைவான துறவற அழைத்தலுக்காக இறைவனுக்கு நன்றி கூறி பங்குமக்கள் கடந்த 12.10.2019 சனிக் கிழமை நன்றித் திருப்பலியை அருட்சகோதரியுடன் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். அருட்சகோதரிக்கு ***பாதுகாவலன்*** வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.